அமைச்சர் சுங்கப்பகுதி விவகாரம் ஆட்சிமன்றத்துக்கு வருகிறது


Registered as a News paper in Ceylon

விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 11
இதழ்:4
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 3 ஜுலை: 26 வெள்ளிக்கிழமை [14-2-69]





பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.


## விவாதிக்க வேண்டுமென எதிர்க்கட்சியினர் கோரிக்கை



கொழும்பு, வியா.

வெளிநாடு சென்று திரும்பிய அமைச்சர் ஒருவருக்கும் சுங்கப்பகுதியினருக்குமிடையில் எழுந்துள்ள பிரச்னை சம்பந்தமாக விபரமான அறிக்கையொன்றை பிரதமர் வெளியிட வேண்டுமென்றும் இது சம்பந்தமாக ஆட்சிமன்றத்தில் விவாதம் நடைபெறுவதற்கு மன்றத்தின் அடுத்த கூட்டம் பிற்பகல் நான்குமணிக்கே ஒத்திவைக்கப்பட வேண்டுமென்றும் எதிர்கட்சியினர் கோரவிருக்கின்றனர்.

சபைக் கூட்டத்தை அன்றைய தினம் முன்னதாகவே ஒத்திவைக்கவேண்டுமென்ற பிரேரணைக்கான முன்னறிவித்தலை எதிர்க் கட்சியினர் பிரதமருக்குஅனுப்பிவைத்திருக்கின்றனர்.

இதேசமயம் அமைச்சர் சம்பந்தப்பட்ட விஷயம்சம்பந்தமாக சுங்கப்பகுதி அதிபர்பிரதமருக்குஅனுப்பிவைத்துள்ள அறிக்கையைப் பிரதமர் பரிசீலனை செய்து வருகிருர்.

இச்சம்பவம் சம்பந்தமாக சுங்கப்பகுதியினர் நடத்திவரும் விசாரணை முடிந்துவிட்டதாகவும் அவர்களின் அறிக்கை நாளை பிரதமரிடம் சமர்ப்பிக்கப்படு மென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பிரச்னையில் சம்பந்தப்பட்ட அமைச்சர் தாம் இது பற்றி இப்போது அறிக்கை எதுவும் வெளியிட விரும்பவில்லையென்றும்சுங்கப் பகுதி விசாரணை அறிக்கை வெளியானதும் அறிக்கை விடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

# மலேரியா ஆக்கிரமிப்பால் யாழ்ப்பாண மக்கள் அவதி

## 836 பேர் ஆஸ்பத்திரியில்

### தடுப்பு நடவடிக்கை தாமதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

**யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் இப்போது மலேரியா தீவிரமாகப் பரவிவருகிறது. கடந்த ஒரு வருட காலத்தில் மலேரியாவால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட 836 பேரில் 403 பேர் யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் இருக்கிருர்கள் என்பது இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாண மாநகரசபை பகுதியில் மலேரியாதடுப்புக்கான டி. டி. ரி. தெளிப்பு வேலைகள் நடைபெருதிருப்பதாலேயே இவ்விதம் மலேரியா தீவிரமாகப் பரவுவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அரியாலை, பாஷையூர், கொட்டடி, கொழும்புத்துறை, குருநகர் ஆகிய இடங்களில் வேகமாக மலேரியா பரவிவருவதாகவும் இப்போது நல்லூர், சுண்டிக்குளி, வண்ணார்பண்ணை ...

... கென சிகிச்சை பெற்றவர்கள் 61 பேர். மொத்தமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற 836 பேரில் சுமார் 372 பேர் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மற்றப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றவர்களை விட சுமார் 200[illegible] பேர் தனிப்பட்ட வைத்திய சாலைகளிலும் ஆயுள்வேத வைத்தியசாலைகளிலும் மலேரியா நோய்க்கு சிகிச்சை பெற்றிருக்கலாமெனவும் இவர்களில் சுமார் 1000 பேர் யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களாக இருக்கலாமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

தீவிர தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் மலேரியா நோய் [illegible] யாழ்ப்பாண நகரை முற்[illegible]கப் பாதிக்கலாமென அஞ்சப்படுகிறது.

...ாங்க பயிற்சிநிலையத்தில்

சியவச சுவீப் டிக்கட்

## 25 சதத்திற்கும் விற்கப்படுகிறதாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதியில் பல பாடசாலைகளில் 'சியவச' சுவீப் டிக்கட்டுகளை வாங்கும்படி மாணவர்கள் கட்டாயப் படுத்தப்படுவதாகத் தெரியவருகிறது. சில பாடசாலைகளில் மாணவர்களின் மறுப்புக் காரணமாக தலைமைஆசிரியர்களே தங்கள் நகைகளை அடகுவைத்து டிக்கட்டுக்குரிய பணத்தைக் கட்டிவருவதாகவும் தெரியவருகிறது.

'சியவச' சுவீப் விற்பனையில் வலுக்கட்டாயம் இல்லை என்று கல்வி அமைச்சு தெரிவித்தபோதிலும், டிக்கட் வாங்காத மாணவர்களை ஆசிரியர்கள் பயமுறுத்தி வருவதாக மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

கல்வி அதிகாரிகளிடமிருந்து டிக்கட்டுகள். வித்தியாதரிசிகளிடம்போய் சேருகின்றனவாம். வித்தியாதரிசிகள் தலைமையாசிரியர்களிடம் கொடுத்து முழு பணத்தையும் கட்டிவிடும்படி கோருகின்றனராம். இதன் விளைவாக மாணவர்கள்மீது, டிக்கட், பலவந்தமாகதிணிக்கப்படுகின்றதாம்.

தலைமைஆசிரியர்கள் டிக்கட்டுகளின் முழுப்பணத்தையும், கட்டி. டிக்கட்டை வாங்கி வந்து, அரைவிலைக்கும், கால்விலைக்கும் விற்பதாகவும் தெரியவருகிறது.

டிக்கட் விற்பனையின் இறுதிக்கட்டத்தில் ஒவ்வொரு ...

## 'குருநகர் மீனவர் மயிலிட்டியில் மீன்பிடிக்க அனுமதிக்கலாம்'

### தனிநபர் கமிஷன் செய்துள்ள சிபார்சு

காங்கேசன்துறை, புதன்

மயிலிட்டி-குருநகர் மீனவர் சர்ச்சை பற்றி கைத்தொழில் கடற்ருெழில் அமைச்சினுல் நியமிக்கப்பட்ட கமிஷன் தீர்ப்பு அரசாங்க வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. சென்ற வருடம் ஆனி மாதம் காங்கேசன்துறைப் பட்டினசபை மண்டபத்தில் தனி நபர் கமிஷனராக விசாரணை செய்த திரு.என். கிருஷ்ணதாசன் தமது தீர்ப்பை அமைச்சுக்கு அனுப்பிவைத்த பின்னர் அமைச்சின் அங்கீகாரத்துடன் 'கசட்' மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

டிகுருநகர் மீனவர் மயிலிட்யில் நங்கூரம் பாய்ச்சுவதற்கு எதிராக மயிலிட்டி மீனவர்களால் தெரிவிக்கப்பட்ட புகாரில், குருநகர் மீனவர் கரைசேருவதில்லை கைதேர்ந்தவர்கள் இல்லை என்றும், அவர்கள் தொழிலை முடித்துக்கொண்டு கரை திரும்பும் போது முறை தவறி கரையோர மீனவரின் வலைகளைச் சேதப்படுத்துகிருர்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மயிலிட்டி மீனவர்கள் செய்துகொண்ட புகார்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

மயிலிட்டியையடுத்த கொத்தாவத்தைக்கு எதிரே வள்ளங்கள் நங்கூரம் பாய்ச்சும் கடற்பகுதி கரையோர மீனவரின் பிரத்தியேகப் பாவிப்புக்கென ஒதுக்கப்பட்டது. இதனுல் கரையோர மீனவர் வாழ்க்கை பாதிக்கப்படுகிறது.

கொத்தாவத்தையடியில் மீன்கள் வாழக்கூடிய பாசி உண்டு. வள்ளங்கள் இவற்றுடன் உரைஞ்சுவதால் பாசி சிதைக்கப்படுகிறது. வேறு ஊரவர் இருப்பதனுல் மீன்களுக்கு இரையாகப் பாவிக்கப்படும் பாசியை மடுப்பதற்கு மயிலிட்டிப் பெண்கள் மிகவும் அசௌகரியப்படுகிருர்கள்.

குருநகர் மீனவர் மயிலிட்டி துரைசாமியின் காணியில் தங்கும்போது சுடுகாட்டை அசுத்தப்படுத்துகின்றனர்.

குருநகர்.மயிலிட்டி மீனவர் பிரச்னை பற்றி விசாரணை செய்த தனிநபர் கமிஷனர் செய்துள்ள சிபார்சுகளில், குருநகர் மீனவர் தமது வள்ளங்களில் கொத்தாவத்தைக்கெதிரே நங்கூரம் பாய்ச்சி மயிலிட்டியிலிருந்து ஆழ்கடல் மீன்பிடித் தொழில் செய்வதற்குத் தாமதமின்றி அனுமதிக்கப்படவேண்டும்.

இயந்திர வள்ளங்கள் நங்கூரமிடுவதற்குத் தகுதியான இடங்களை வடகரையில் அல்லது வேறு கரையில் தேர்ந்தெடுக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்

(4-ம் பக்கம் பார்க்க)

சமூக குறைபாடுகள சட்டம

## திருத்துவதற்கு சிபார்சு செய்ய கமிஷன் நியமிக்கவேண்டும்

எதிர்க்கட்சியினர் பிரேரணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் வலுக்கட்டாயம் இல்லை என்று கல்வி அமைச்சு தெரிவித்தபோதிலும், டிக்கட் வாங்காத மாணவர்களை ஆசிரியர்கள் பயமுறுத்தி வருவதாக மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

கல்வி அமைச்சு டிக்கட்டுகளை, பிராந்திய அதிபதிகளிடம் கொடுத்து டிக்கட் அத்தனைக்குமுரிய பணத்தைக் கட்டிவிடும்படியும் விற்பனையாகாதடிக்கட்டுகள் திருப்பி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாதென்றும் பிராந்திய கல்வி அதிகாரிகளிடம் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

யும், கட்டி. டிக்கட்டை வாங்கி வந்து, அரைவிலைக்கும், கால்விலைக்கும் விற்பதாகவும் தெரியவருகிறது.

டிக்கட் விற்பனையின் இறுதிக்கட்டத்தில் ஒவ்வொரு பிராந்திய கல்விஅதிபதியும், உரியபணத்தைகல்விஅமைச்சில் சேர்த்தே ஆகவேண்டுமாம். ஒவ்வொரு பிராந்தியத்திலிருந்தும், ஒரு லட்சம் ரூபாவிற்கு குறையாமல் கல்வி அமைச்சு எதிர்பார்ப்பதாகவும் அறியப்படுகிறது.

அரியாலை, பாசையூர், கொட்டடி, கொழும்புத்துறை, குருநகர் ஆகிய இடங்களில் வேகமாக மலேரியா பரவிவருவதாகவும் இப்போது நல்லூர், சுண்டிக்குளி, வண்ணார்பண்ணை ஆகிய இடங்களுக்கும் பரவி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு, வேலணை, மண்டைதீவு, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளிலிருந்து 1968-ம் வருடம் ஜனவரி மாதத்திலிருந்து 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் வரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மலேரியாவுக் 200. போர் தனிப்பட்ட வைத்தியசாலைகளிலும் ஆயுள்வேத வைத்தியசாலைகளிலும் மலேரியா நோய் பாண நகரை முற்றுகப் பாதிக்கலாமென அஞ்சப்படுகிறது.

# கமிஷன் நியமிக்கவேண்டும்

## எதிர்க்கட்சியினர் பிரேரணை

கொழும்பு, வியாழன் சமூக குறைபாடுகள் சம்பந்தமாக ஆராய்ந்து இப்போது அமுலில் இருக்கும் சட்ட முறைகளை மாற்றி அமைப்பது பற்றிச் சிபார்சு செய்ய கமிட்டி ஒன்றை நியமிக்குமாறு எதிர்க்கட்சியினர் ஆட்சிமன்றத்தில் கூட்டுப்பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

சிறுபான்மை வகுப்பினர் சமூகக் குறைபாடுகளாலும் பிற இடர்பாடுகளாலும் பாதிக்கப்படுவது பற்றி ஆராய்ந்து, அவர்களது உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுச் சட்டத்தை மாற்றியமைக்க சிபார்சு செய்யக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டுமென்று பிரேரணையில் எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

கூட்டணியைச் சேர்ந்த எதிர்க்கட்சித்தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா திரு. விக்கிரமசிங்கா, திரு. என். எம். பெரேரா, திரு. சுபசிங்கா ஆகியோர் கூட்டுப் பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளனர்.

1957-ம் ஆண்டின் சமூகக் குறைபாடுகள் சட்டத்தைத் திருத்தி, சிறுபான்மை வகுப்பினர் எனக் கருதப்படுபவர்களுக்குள்ள இடர்களை தீர்த்துவைப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் கமிஷன் சிபார்சு செய்யவேண்டுமென்றும், சட்டமுறைகளை மாற்றியமைப்பதாலும் மற்றைய வேறு வழிகளாலும் சிறுபான்மையினரின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படவேண்டுமென்றும் அந்தப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசாங்கபயிற்சிநிலையத்தில் ஊழலும் மோசடியுமாம்

யாழ்ப்பாணம், வெள்ளி அரசாங்க பயிற்சி நிலையத்தில் கள்ளக் கையெழுத்து வேட்டையும், பணமோசடியும் நடக்கிறதாம், இது சம்பந்தமாக புகாரொன்று தொழிலமைச்சர் திரு. மொகமட்டுக்கும், தொழில் பகுதி கமிஷனருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்படும் சகாயப்பணத்தை மோசடி செய்வதாகவும், மாணவர் வரவு இடாப்பில் சில பகுதிகளைக் கிழித்துவிட்டு அதற்காகக் கள்ளக் கையெழுத்திட்டதாகவும் கல்லூரிப் போதனாசிரியர் ஒருவர் உட்பட இன்னும் சிலரில் குற்றஞ்சாட்டி இப்புகார் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாம்.

இந்த மோசடி சம்பந்தமாக குறிப்பிட்ட கட்டடப் பயிற்சி நிலையத்தில் கல்வி பயிலும் மாணவரின் பெற்றோர் யாழ். மார்வட்ட அரசாங்க அதிபருக்கு புகார் ஒன்று அனுப்பிவைத்துள்ளனர். இந்த மோசடிபற்றிய தகவல்களை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு தொழிற்பத்திரம் வழங்க மேலதிகாரிகள் மறுப்பதாகவும் இப்புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்புகார்கள்சம்பந்தமாக உடனடியாக விசாரணைசெய்யுமாறு நல்லூர் எம். பி. டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தொழில் கமிஷனரை வேண்டியுள்ளார்.

(கா. நி.)

## நிலச்சரிவில் 30 பேர்பலி

ஜாகர்த்தா, பெப். 14 இந்தோனேஷியா வில் இன்றுஏற்பட்டநிலச்சரிவில் 30க்கு அதிகமானோர் மாண்டனர். 200 பேருக்கதிகமானோர் வீடிழந்தனர்.

# தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி நேற்று இழுக்கப்பட்ட 233-வது தேசிய லொத்தர் சபை சுவீப் சீட்டிழுப்புமுடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு

26 B 0391 ரூ. 100,000

இரண்டாம்பரிசு

12 G 0843 ரூ.40,000

மூன்றும் பரிசு

03 P 1000 ரூ.10,000

ரூபா 7979 பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:-

(4-ம் பக்கம் பார்க்க)

மண்டைதீவு கொலைவழக்கு

# 1-ம் எதிரிக்கு 6 வருட கடுழியம் 2-ம் எதிரிக்கு 12 வருடம்

## கைமோசக் கொலைக் குற்றத்தை எதிரிகள் ஒப்புக்கொண்டனர்

யாழ்ப்பாணம், வெள்ளி மண்டைதீவு கொலை வழக்கில் 1ம் எதிரியான குலசிங்கநாதனுக்கு 6 வருட கடுழிய சிறைத்தண்டனையும், 2ம் எதிரியான சிவபாலசுந்தரத்திற்கு 12வருட கடுழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. எதிரிகள் இருவரும்கைமோசக் கொலைக்குற்றத்தை ஒப்புக் கொண்டதை தொடர்ந்து நீதியரசர் ஓ.எல்.டி. கிறெஸ்டர் நேற்றுக்காலை தீர்ப்பு வழங்கினர்.

இவ்வழக்கு 68 ம் ஆண்டு நடைபெற்ற அசைஸ் விசாரணையின்போது விசாரணை செய்யப்பட்டு எதிரிகள் இருவருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டது. எதிரிகள் சார்பில் அப்பீல் செய்யப்பட்டு மீண்டும் வழக்கை விசாரணைசெய்யும்படி அப்பில் நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டு, நேற்றுக் காலை இவ்வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் ஓ. எல்.டி. கிறெஸ்டர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

இழ் வழக்கில் 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் தேதி மண்டைதீவில் ஐயாத்துரை சாம்பசிவமூர்த்தி என்பவரைக் கொலை செய்ததாக கார்த்திகேசு குலசிங்கநாதன், சரவணமுத்துசிவபால சுந்தரம் ஆகியோர் மீதுகுற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1-ம் எதிரி சார்பில் அட்வக்கேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் ஏ. அன்ரனியின் அனுசரணையுடன் ஆஜரானர். 2ம் எதிரிசார்பில் அட்வகேட் எஸ். தம்பித்துரை புறக்டர் பி. கதிரவேலுவின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் அட்வக்கேட் த. கனகசபை நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் ரஞ்சித் குணதிலகா ஆஜரானர்.

அசைஸ் விசாரணை மீண்டும் இம்மாதம் 17ந் தேதி காலை ஆரம்பமாகும்.

# பொலிசருக்கு எதிரான புகார்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி பொலிஸாருக்கு எதிரான எந்தப் புகார்களையும் பொலிஸ் நிலையங்களில் செய்ய வேண்டாமென்றும், அவைகளைத் தன்னிடமே நேரில் வந்து செய்யுமாறும் வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபய குணவர்த்தனவினல் பொலிஸார் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் பற்றி அனுப்பி வைக்கப்பட்ட ஒரு சுற்று நிருபத்தைத் தொடர்ந்தே பொலிஸ் சுப்பிரின்டன் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

பொலிஸ் நிலையங்களுக்குச் செல்லுபவர்களை இம்சிப்பது, புகார்கள் செய்யச் செல்பவர்கள் மீது பாகுபாடு காட்டுவது, பொது மக்களிடம் லஞ்சம் கேட்பது, போன்ற ஊழல்கள் பற்றிக் கிடைக்கும் புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், தற்காலிக வேலை நீக்கம் செய்யவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காலை 8 மணிமுதல் இரவு எத்தனை மணிவரையானலும் சரி பொலிஸாருக்கு எதிரான புகார்களை தன்னிடம் செய்யலாமென பொலிஸ் சுப்பிரின்டன் மேலும் தெரிவித்துள்ளார்.

(கா. நி)

# இளவாலை ப. நோ. கூ. சங்க கட்டடத்தில் தீ பற்றியது

## உணவு பொருள், புடவை உட்பட ரூ. 50,000 வரை நாசம்

(நமது பண்டத்தரிப்பு, குரும்பசிட்டி நிருபர்கள்)

பண்டத்தரிப்பு, வியா. இளவாலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட தீவிபத்து 50000ரூபாவரையான சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாம்.

புதன்கிழமை நள்ளிரவு 12.30 மணியளவில் இளவாலை பிரதானவீதியிலிருக்கும் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கக்கட்டடம் தீப்பிடித்து எரிந்ததால் கட்டடம் பலத்த சேதத்துக்குள்ளாகியது. இங்கு மக்களுக்கு விநியோகிக்கப்படவிருந்த சுமார் 200 மூடை சீனி, அரிசி, மிளகாய், பருப்பு, மல்லிபோற உணவுப் பொருள்களும்புடவைகளும் தீயினல் நாசப்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த பலநோக்கக் கூட்டுறவுச் சங்கக்கட்டடத்துக்கு அருகிலிருந்தவீடுஅபாயத்திலிருந்து தப்பியது. தெய்வாதீனமாக எவருக்கும் எதுவிதகாயமும் ஏற்படவில்லை.

தீயணைக்கும் வேலையில் இளைஞர்களும் முதியவர்களும் தீவிரமாகஈடுபட்டனர் பெரியவிளான்கிராமசேவையாளர் திரு. வேதநாயகம், சங்கானை, காங்கேசன்துறை ஆகிய பொலிஸ்நிலையத்தாருடன் தொடர்புகொண்டு அவர்களதுஉதவியை உடன் நாடினர். பலாலி விமான நிலைய தீயணைப்புப்படையினருடன் தொடர்புகொள்ள முயற்சி செய்யப்பட்டபோது தொடர்புகொள்ள முடியாமல் போய்விட்டதாகக் கூறப்பட்டது.

சங்கானை, காங்கேசன்துறைப் பொலிசார் ஸ்தலத்துக்கு விரைந்து விசாரணை நடத்தினர்.

இத்தீவிபத்து சம்பந்தமாக சங்கானைப் பொலிசார் இப்போது இருவரைத்தேடி வருகின்றனர்.

இப்பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் விரோதிகள் யாரோ திட்டமிட்டு இச்சதி வேலை மேற்கொண்டதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இத்தீவிபத்தால்இங்குள்ள பொதுமக்களின் பங்கீட்டரிசி விநியோகம் பாதிக்கப்படுமோவென அஞ்சப்படுகிறது.

இளவாலை அன்னம்மாள் ஆலய கட்டளைக்குரவர் வண. துரைசிங்கம், உதவிக் கட்டளைக்குரு வண. தியோஜினஸ் ஆகியோரும் சம்பவ இடத்தைப் பார்வையிட்டனர்.

இதன்மனேஜரும் பண்டத்தரிப்பு கிராமசபையின்10ம் வட்டார அங்கத்தவருமான திரு. என். பி. இராசநாயகம் இத்தீவிபத்துக் குறித்து பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளார்.

# தமிழகமுதல்வர் கருணநிதி டில்லி செல்வார்

சென்னை, பெப். 13 இம்மாதக் கடைசியில் டில்லியில் நடைபெறும் முதலமைச்சர்கள் மகாநாட்டில் தமிழகத்தின் புதிய முதலமைச்சர் திரு. மு. கருணநிதி கலந்து கொள்வார். இந்தத் தகவலை இன்று அவரே வெளியிட்டார்.

"மதுவிலக்கு தளர்த்தப்படுமா?" என்று நிருபர்கள் இன்று திரு. மு. கருணநிதியைக் கேட்டார்கள்,

அறிஞர் அண்ணதுரையின் மது விலக்குக் கொள்கையை தொடர்ந்து பேற்கொள்ளப் போவதாகவும், மதுவிலக்குக் கொள்கையில் எவ்வித மாறுதலும் ஏற்படமாட்டாதென்றும் முதலமைச்சர் சொன்னர்.

துணை அமைச்சர்கள் காரியகரிசிகளை இப்போது நியமிப்பதில்லை என்றும் திரு. கருணநிதி கூறினர்.

1969-70-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு ராஜ்யசபை வரவுசெலவுத்திட்டம் அடுத்தமாதம் முதல்வாரத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் தகவல் தந்தார்.

# 'வெள்ளைப் பறவை'க்கு ரூ. 5,000

சென்னை, பெப். 13 அகில இந்திய சாகித்திய அக்கடமியின் 1967-ம் ஆண்டுக்கான தமிழ்மொழி நூலுக்கான 5 ஆயிரம் ரூபா பரிசு திரு. அ. சீனிவாசகராகவன்எழுதிய 'வெள்ளைப் பறவை' என்ற கவிதை நூலுக்குக் கிடைத்துள்ளது.

பத்து மொழிகளிலுள்ள நூல்களுக்கு 5 ரூபா பரிசும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பர

### விற்பனைக்கு

கார்:
நல்ல நிலையிலுள்ள, என்ஜின், பிறேக் முதலியவை உட்பட எல்லாம் புதிதாக சீர்செய்யப்பட்டுள்ள A 40 டெவோன் ஒஸ்ரீன் கார் உடன் விற்பனைக்குண்டு. 326/1 நாவலர் வீதி, நல்லூர். 670

காணி:
மீசாலை வடக்கு வேம்பிராய்ச் சந்தியிலும், ''சல்வேஷன் ஆமிக்கு'' எதிராயும் றோட்டோரமாய் உள்ள மிகவும் திறமான 12 பரப்புத் தென்னங்காணியும், அதற்கு மிக அண்மையில் உள்ள 25 பரப்புத் தென்னங்காணியும் விற்பனைக்கு உண்டு. தனியாகவோ, ஒருமிக்கவோ வாங்க விரும்புவோர் சாவகச்சேரி தபாற் கந்தோர் வீதியில் இருக்கும் சாது சுப்பிரமணியத்துடன் தொடர்பு கொள்ளவும். 663

நல்ல நிலைமையில் உள்ள மார்சிபெர்குசன் ரக்ரர் 135 விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு R. குணரெத்தினம், ஸ்போட்ஸ்கிளப், பரந்தன். 672

கார்:
ஒஸ்ரீன் ஏ 40 டிவெற் திறமையான நிலையில் விற்பனைக்குண்டு. ஒருவரின் சொந்தப்பாவிப்பிலிருந்தது டன் ஒருவராலேயே செலுத்தப்பட்டு வந்தது. வாகனத்தை வந்து பார்வையிடலாம். 82, கொள்ளுப்பிட்டி ஒழுங்கை, கொழும்பு-3. 671

### தவறிவிட்டது

புற்பாயினுள் வைத்துக் கட்டப்பட்ட தலையணை, சாறி உட்பட இன்னும் சில பொருட்கள் கார் கூட்டிலிருந்து வல்லைவெளியில் விழுந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து எமக்கு அறிவிக்கவும். மு. வடிவேலு, மாதனை, பருத்தித்துறை. 673

4-வது வாரம்!
**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
மற்றும் பலர் நடித்த

# முல்லைத்தீவு கொலைவழக்கு: எதிரிக்கு 2500 ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

முல்லைத்தீவு கொலை வழக்கில் எதிரியான நடராசாவுக்கு நேற்று 2500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் கட்டத் தவறினால் 4 வருட கடூழிய சிறைத்தண்டனை யென்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவ் வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர், ஓ. எல்.டி. கிறெஸ்டர் முன்னிலையில் நேற்று முன்தினம் காலை விசாரணை செய்யப்பட்டது. எதிரி கைமோசக் கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இவ்வழக்கு முல்லைத்தீவில் 67-ம்ஆண்டு ஆகஸ்ட் 31-ம் தேதி இரத்தினம் நடராசா என்பவர் டி.எம்.எஸ்.பீரிஸ் என்பவரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வக்கேட் ஜி. ஈ. சிற்றிகியு. சி, அட்வகேட் ஜி. ஈ. சிற்றி (ஜூனியர்) வழக்கறிஞர் ஜோர்ச் கந்தப்பா ஆகியோர், புறக்டர் புரஸ்படீ கொஸ்ராவின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால், வழக்கறிஞர் எம். தேவசகாயம் நியமிக்கப் பட்டிருந்தார் முடிக்குரிய தரப்பில் அட்வகேட் ரஞ்சித் குணதிலகா ஆஜரானார்.

## 'டைனமைட்' உட ஒருவர் கைது

நல்லூர், வியாழன்

சட்டவிரோதமாக 24 'டைனமைட்' வெடிகளை வைத்திருந்ததென்ற சந்தேகத்தின் பேரில் கரையூரைச் சேர்ந்த பி. அரசரத்தினம் என்பவரை யாழ்ப்பாணம் பொலிசார் கைது செய்தனர்.

வெடிகள் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. சந்தேகநபர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிசார் தெரிவித்தனர்.

## சீதனத்தை திருப்பிக் கேட்ட வழக்கு தள்ளுபடி

சாவகச்சேரி, வியாழன்

சீதனப்பணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுவதற்காகத் தொடரப்பட்ட வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

எஸ். கந்தையா என்பவர் தமது மருமகனை குணசிங்கராஜாவிடமிருந்து தாம் கொடுத்த சீதனப்பணமான எண்ணாயிரம் ரூபாவையும் பெற்றுத் தரும்படி சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. ஒகஸ்ரீன் சில்வா முன்னிலையில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

விசாரணையின் பின்னர் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

எதிரி தரப்பில் புறக்டர் திரு. எஸ். பி. மயில்வாகனத்தின் அனுசரணையுடன் அட்வக்கேட் திரு. ஏ. வி. குலசிங்கம் ஆஜரானார்.

## 21-ந் திகதி வரை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

வவனியா பார்வதி பலாத்கார வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏ. எல். டி. கிறெஸ்டர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரியான சப் இன்ஸ்பெக்டர் பெரேரா கோர்ட்டிற்கு வராததால்விசாரணை மார்ச் மாதம் 21-ந் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

எதிரியான பெரேரா வைத்திய அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பித்திருப்பதால் விசாரணையை ஒத்திப்போடும்படி எதிரிக்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்த அட்வக்கேட் எம். குகராசா நீதியரசரிடம் கோரியதைத் தொடர்ந்து நீதியரசர் விசாரணையை ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் 67ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ந் திகதி வவனியாவில் நாகலிங்கம் பார்வதி என்ற இளம் பெண்ணை பலாத்காரம் செய்ததாக சப் இன்ஸ்பெக்டர் எம். என். ஏ. பெரேரா மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

விசாரணையைப் பார்ப்பதற்காக நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டு நின்றனர்.

மல்வத்தைபீட மகாநாயக்க தேரோவின் மறைவு குறித்து அனுதாபக் கூட்டமொன்று யாழ்ப்பாணம் ஸ்ரீநாகவிகாரையில் நடைபெற்றது. திராவிடபௌத்த சங்கத் தலைவர் திரு. ஜே. ஆர். டேவிட் இக்கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

## இன்றைய பலன்

வெள்ளிக்கிழமை
(14-2-69)
மாசி மாதம், 3 உ

திதி- திரயோதசி இரவு 2-34 மேல் சதுர்த்தசி.
நட்சத்திரம்- உத்தராடம்.
ராகுகாலம் - 11-04 12-34.
சுபநேரம்- 6-34 8-04.

இன்று பிறந்தவர்களுக்கு -- விவசாயிகளுக்கு வெற்றிக்குரிய ஆண்டாகும். தானிய விருத்தியும் தனச் சிறப்பும், குடும்பஸ்தர்களுக்கு குதூகல மிகுதியும் பிணி உடையோர் சுகம் அடைவர், பொருள் பிண கு ஓங்கும் புண்ணிய விடுப்புகள் தரும் நல்லாண்டாகும்.

மேஷம்- அறிவிற்கு விருத்தி, ஆராய்ச்சியில் ஆர்வம்.
ரிஷிபம் - பாக்கிய விருத்தி, பரம்பொருள் சிந்தை.
மிதுனம்- எதிரி பகை, ஏக்கமிகுதி
கடகம் - களேஸ்திர சுகம், கண்ணியம் சேரும்.
சிம்மம்- கிட்டி வரும் பகை, எட்டி நில்.
கன்னி- பிதாவழிச் சுகம், பெரியோர் மதிப்பு.
துலாம்- புதிய முயற்சி, பொதுசனத் தொடர்பு.
விருச்சிகம் - தேனான வாழ்வு, தேடியது கிடைக்கும்.
தனுசு- பொருள்விரையம், பொல்லாங்கு கேட்டல்.
மகரம்- மக்கள் பிணி மனப் போராட்டம்.
கும்பம்- வாக்கில் மேம்பாடு, வசதிகள் பெருகும்.
மீனம்- சூட்சி மிகுதி, சோதனைக்கட்டம்.

சோதிடக்கலாநிதி
**திருமலை வேலுப்பிள்ளை**

முதல் தடவையாக

# யாழ்ப்பாண கிரிக்கெட் கோஷ்டி கொழும்பு சென்றது

யாழ்ப்பாணம், வெள்ளி

''யாழ். மாவட்டத்திலுள்ள பல விளையாட்டுக் கழகங்களின், உதைபந்தாட்டக் கோஷ்டிகளே இதுவரைகாலமும் வெளியிடங்களுக்குச் சென்று பல போட்டிகளில் பங்குபற்றின. ஆனால் இதுவரை, எக்கழகங்களிலிருந்தும் ஒரு கிரிக்கெட் கோஷ்டியும் வெளியிடங்களுக்குச் செல்லவில்லை, இக்குறையை எமது அரியாலை விளையாட்டுக் கழகம் இன்று பூர்த்தி செய்துவிட்டது.'' இவ்வாறு நேற்று கொழும்பு சென்றுள்ள அரியாலை விளையாட்டுக் கழக கிரிக்கெட் கோஷ்டியின் பொறுப்பாளர் திரு. ரி. பிரபாகரன் எமது நிருபரிடம் தெரிவித்தார்.

அரியாலைக் கிரிக்கெட் கோஷ்டி, கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் மொத்தம் மூன்று போட்டிகளில் பங்கு பற்றுகின்றது. முதலாவது போட்டி, கொழும்பு இந்துக் கல்லூரியுடனும், இரண்டாவது போட்டி கொழும்பு நீர்ப்பாசன இலாகா கிரிக்கெட் கோஷ்டியுடனும் மூன்றாவது போட்டி கட்டுப்பத்தை பொறியியல் பயிற்சி கல்லூரியுடனும் நடக்கும்.

அரியாலை விளையாட்டுக் கழக கிரிக்கெட் கோஷ்டிக்கு, இம்மனுவல் தலைமை தாங்குகின்றார்.

இக்கோஷ்டியில் மற்றும் சிறந்தவீரர்களான லூயிஸ், பாலகிருஷ்ணன், சிவபாலன், பத்மன், பி ஜேகேஷ்வரன், எஸ். பொன்ராசா, யோகம், எஸ்.செல்வராசா, கே. துரைரட்ணம், தர்மபாலசிங்கம், மாணிக்கவாசகம், குணசேகரன், குககாந்தன் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

(தே. நி)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வெள்ளி 14 - 2 - 69**

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 பண்ணூரிந்தமிழ், 8-00 குரான், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துகள், 5-30 தொழிலாளர்வேளை.

இரவு 6-15 பஜனை, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 முத்திநெறி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 கதாப் பிரசங்கம்.

மானிப்பாய்
**வெஸ்லி சினிமா**
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா. போயா 2-30 மணி
சிவாஜி - தேவிகா
நடித்த
**ஆண்டவன் கட்டளை**

**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
நடித்த
**குடியிருந்த கோயில்**

இணுவில்
**ஸ்ரீ காலிங்கன்**
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
சிவாஜி - ஜி. வரலெட்சுமி
நடித்த

# டாக்டராக நடித்து தாலியை அறுத்தார்

யாழ்ப்பாணம், வெள்ளி

டாக்டராக நடித்து தாலிக்கொடியை அறுத்துக் கொண்டோடினாராம் இளைஞர் ஒருவர்.

யாழ்ப்பாணம் நிக்கலஸ் லேனிலுள்ள வீடொன்றில் பெண் ஒருவர் குளித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இளைஞர் ஒருவர் தான் டாக்டர் எனக் கூறி கதையளந்துவிட்டு திடீரென தாலிக்கொடியை அறுத்துக் கொண்டோடினாராம். இது பற்றி உடனே யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. என். இ. இரத்தினம், திரு. வால்டர் ஆகிய இருவரும் விசாரணைக்காக அனுப்பப்பட்டனர்.

[illegible] பொலிஸ் கான்ஸ்டபிள் [illegible]த்தினம் நேற்று நண்பகல் சந்தேகநபரைக் கைது செய்தார். குறிப்பிட்ட இளைஞர் [illegible] சேர்ந்த [illegible] [illegible]தாகக் கூறப்படும் 740 [illegible]ாய் [illegible] பெறுமதியான

## ரூ. 500 பிணையில் செல்ல அனுமதி

புலோலி[illegible]வியா மந்திகையிலுள்ள[illegible]பால் போடும் பெட்டிக்குள் இரவு நேரங்களில் ஈரம் படிந்த [illegible]ட்டிகளும் சேறு, அழுக்குப்பிடித்த கடதாசிகளும் இனம் தெரியாத [illegible]ஷமிகளால் போடப்படு[illegible]தாம்.

**ீடைகள், களைகளிடமிருந்து உங்கள் நெற்பயிரைக் காப்பாற்றுங்கள்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
மற்றும் பலர் நடித்த
**ஒளி விளக்கு**
(ஈஸ்ட்மென் கலர்)
(எஸ். ரி. ஆர். வெளியீடு)

இனுவில்
**ஸ்ரீ காலிங்கன்**
தினசரி 6-30, 9-30
ஞாயிறு, போயா 2-30
சிவாஜி - ஜி. வரலெட்சுமி
நடித்த
**நான் பெற்ற செல்வம்**

**மனோஹரா** — **ராணி**
(யாழ்ப்பாணம்) (யாழ்ப்பாணம்)
தினசரி 2-45, 6-45, 9-45. தினசரி 2-30, 6 30, 9-30.
ஜெய்சங்கர் — விஜயநிர்மலா
மற்றும் பலர் நடித்த
**நீலகிரிஎக்ஸ்பிரஸ்**
(பாஸ்களும், சலுகைகளும் ரத்து)

**வெலிங்டன் — யாழ்நகரில்**
தினசரி 2-30, 6-30, 9-30 மணிக்கு
★மக்கள் திலகம் **எம். ஜி. ஆர்.**
★நடிகையர் திலகம் **சாவித்திரி**
★நம்பியார் ★நாகேஷ் ★ராகினி
நடித்த
கௌரி பிக்சர்ஸ் **பரிசு**

**மு. கருணாநிதியின்** விமர்சனத்துடன்
**S. S. வாசன்**
**அவர்களால்**
ஈஸ்மன்கலரில்படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற
இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்



மற்றும்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!

தமிழ்நாடுசென்று விழாவைப் பார்க்காதவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
ஒவ்வொரு தமிழனும் அவசியம் பார்க்கவேண்டிய படம்.

**கிங்ஸ்லி** — **பிளாஸா**
மற்றும் சிலிமாஸ் திரைகளில்
**சிவாஜி—கே. ஆர். விஜயா**
முத்துராமன்—நாகேஷ்—எல். விஜயலக்ஷ்மி
நடித்த
**ஊட்டிவரைஉறவு**
(ஈஸ்ட்மன் கலர்)

கதையளந்துவிட்டு இடமாறென தாலிக்கொடியை

## ரூ. 500 பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம் வெள்ளி நாலரைப்பவுண் தங்கச் சங்கிலி களவு சம்பந்தமாக கைது செய்யப்பட்டவரை 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார் யாழ். மாஜிஸ்திரேட் ஜனாப் முகமது ஜமீல்.

சந்தேக நபரான இலகநாதன் என்பவர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றசங்கிலிக் களவு சம்பந்தமாக மண்கும்பானிலுள்ள அவரின்வீட்டில் வைத்துப்பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

இவரது வீட்டிலிருந்து களவாடப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் சில சைக்கிள் உதிரிப்பாகங்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளதாக தெரிவித்தனர்.

சந்தேக நபரை மீண்டும் அடுத்தமாதம் 20-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். (கா. நி)

வேம்படி

## 9 ஆசிரியைகள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் உயர்தர வகுப்புகளுக்கு கல்வி புகட்டி வந்த 9 பட்டதாரி ஆசிரியைகள் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

கடந்த வருடம் இக் கல்லூரியிலிருந்து பல மாணவிகள் பல்கலைக்கழகத்திற்கு எடுபட்டுச் சென்றுள்ளதால் இவ்வித நடவடிக்கை வேண்டுமென்றே மேற்கொள்ளப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதுபற்றிய விடயம் யாழ்ப்பாணம் எம். பியின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. (கா. நி)

## டிஸ்பென்சரியாவது வேண்டும்

காங்கேசன்துறை, வியாழன்

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரி தெல்லிப்பழைக்கு இடமாற்றம் செய்யப்படவிருப்பதால் தெல்லிப்பழையில் ஒரு டிஸ்பென்சரியாவது அமைத்துத்தரும்படி காங்கேசேன்துறை பட்டின சபைத்தலைவர் திரு. ஆ. வ. சதாசிவம், சுகாதார அமைச்சர் ஈ. எல். சேனநாயக்காவைக் கோரியுள்ளார்.

...த்தினம் நேற்று நண்பகல் சந்தேகநபரைக் கைது செய்தார். குறிப்பிட்ட இளைஞர் திருநெல்வேலியைச் சேர்ந்தவராம் இவர் திருடியதாகக் கூறப்படும் 740 ரூபாய் பெறுமதியான தாலிக்கொடியும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (கா. நி)

...போடும் பெட்டிக்குள் இரவு நேரங்களில் ஈரம் படிந்த மண்கட்டிகளும் சேறு, அழுக்குபிடித்த கடதாசிகளும் இனம் தெரியாத விஷமிகளால் போடப்படுகிறதாம்.

இதனால் பெட்டிக்குள் போடப்பட்டிருக்கும் கடிதங்கள் சேதமடைகின்றனவாம்.

அடக்கம் செய்யப்பட்ட

# சடலம் தோண்டி எடுக்கப்பட்டது

நல்லூர், வியாழன் மரணவிசாரணையின் பின்னர் தீர்ப்பு வழங்கப்படாமலேயே அடக்கம் செய்யப்பட்ட ஒருவரது சடலம் மீண்டும் தோண்டி எடுத்து பிரேதபரிசோதனை செய்யப்படவிருக்கிறது. இதற்கான அனுமதியை பொலிஸார், மாஜிஸ்டிரேட்டிடம் கோரவிருக்கின்றனர்.

கடந்தமாதம் 29-ந் திகதி மரணமான கிளிநொச்சியைச் சேர்ந்த வல்லிபுரம் பாலசிங்கத்தின் மரணம் ஒரு 'கொலை' யாக இருக்கலாமென்ற சந்தேகத்தின் பேரிலேயே பொலிஸார் இந்த மேல்நடவடிக்கையை மேற்கொள்கின்றனர்.

இதற்கிடையில் இந்த மரணம் சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் மூவரைக் கிளிநொச்சிப் பொலிசார் நேற்றுக் கைதுசெய்தனர். கைது செய்யப்பட்டவர்களான சங்கரப்பிள்ளை, சின்னத்துரை, தில்லைநாதன் ஆகிய மூவரும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

மரணமானவரைக் கொலைசெய்தபின்னர், அவரது வாய்க்குள் நச்சுத்திராவகம் திணிக்கப்பட்டதாகவும், பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. புலன் விசாரணை தொடர்ந்து நடக்கின்றது.

## மின்சாரத்தால் தீ விபத்து

புலோலி, வியா. பூட்டியிருந்தகடையொன்று தீப்பற்றி எரிந்ததால் சுமார் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் தீக்கிரையாகின. மந்திகையைச் சேர்ந்த கே. வி. கந்தப்பு என்பவருடைய கடையே இவ்வாறு தீப்பிடித்து எரிந்தது.

இரவு கடையைப் பூட்டிவிட்டுச் சென்றதும் மின்சாரக் கோளாறு காரணமாக பின் பகுதியிலிருந்து தீப்பிடித்ததாகத்தெரிகிறது உடனடியாகபருத்தித்துறை மின்சார இலாகாவிலிருந்து மின்சாரசேவையை தடைசெய்ததின் மூலம் ஆபத்து நீக்கப்பட்டது. தீயணைப்பு வேலையில் தீவிரமாய் ஈடுபட்ட மூவர் காயமுற்றனர்.

## முறைப்பாடு செய்வதுஎப்படி?

புலோலி, வியா. பருத்தித்துறை பொலிஸ் நிலையம் தனிச் சிங்கள மயமாக இருக்கிறது. பருத்தித்துறைப்பகுதி பொதுமக்கள் இதுபற்றி விசனம் தெரிவித்துள்ளனர்.

தமிழ் தெரியாத பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் இங்கு நியமிக்கப் பட்டிருப்பதால் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு செய்யும் பொதுமக்கள் கஷ்டப்படவேண்டியுள்ளது.

இவ்வருடம் மாற்றலாகி வந்திருக்கும் அநேக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அறவே தமிழ் தெரியாததால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## பிரிவுபசாரம்

உடுப்பிட்டி, வியாழன் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழகத்தில் மூன்று வருடகாலமாகக் கப்டனாகக் கடமையாற்றிய திரு. டி. எம். வேதாபரணம் பொலிஸ் பயிற்சிக் கலாசாலைக்குச் செல்வதை முன்னிட்டு மேற்படி கழகத்தால் பிரியாவிடை அளிக்கப்பட்டது. திரு. ஆ. டே. போல் தலைமையில் இப் பிரிவுபசாரம் நடைபெற்றது. திருவாளர்கள் இ. மதியூகநாதன், ம. அதிருபசிங்கன், ரவீந்திரநாதன் ஆகியோரும் பேசினர்.




எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்
AGENTS
**றோயல் டிஸ்பென்ஸறி**
PHONE **397** JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபு பிரஜைகள் 14 பேரை உயிருடன் புதைத்தார்களாம்

## இஸ்ரேலியர்மீது ஐ.நா.வில் ஈராக் செய்துள்ள புகார்

வாஷிங்டன், பெப். 18

இஸ்ரேல் பலவந்தமாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் பகுதிகளில் காட்டுமிராண்டித்தனமாக அரபு மக்களைக் கொடுமைப்படுத்துவதாக ஈராக் அரசாங்கம் ஐ.நா.வில் புகார் கூறியிருக்கிறது.

இஸ்ரேல் ஆட்சியாளர்களுக்கெதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்த அரபுப் பிரஜைகள் 14 பேரை இஸ்ரேலியர் உயிருடன் புதைத்ததாக ஈராக் தனது புகாரில் தெரிவித்துள்ளது. அண்மையில் இஸ்ரேலியருக்கெதிரான ஆர்ப்பாட்டங்களின் போது 93 அரபுப் பள்ளிமாணவிகளான சிறுமிகள் காயமடைந்ததாகவும் இந்தச் சிறுமிகளின் மீது இஸ்ரேலியர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும் ஈராக் குற்றஞ்சாட்டியுள்ளது. இந்தமாதிரியான காட்டுமிராண்டிச் செயல்கள் மேலும் இடம்பெருமல் தடுக்கும்படி ஈராக் ஐ. நா. விடம் கேட்டிருக்கின்றது.

அண்மையில் ஈராக் அரசாங்கத்துக்கெதிராக உளவு பார்த்த குற்றத்தின்மீது 9 யூதர்கள் உட்பட 14 பேர் ஈராக்கில் பகிரங்கமாகத் தூக்கிலிடப்பட்டது குறித்து உலகில் பல நாடுகளில்கவலை தெரிவிக்கப்பட்டதும் இதற்கு எதிராகப் பழிவாங்கும் காரியம் எதையும் இஸ்ரேல் செய்யக்கூடாதென்று அமெரிக்கா போன்ற நாடுகள் கோரிக்கை விட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கவை. பல நாடுகள் வேண்டுகோள் விடுத்தும் அதைக் கேட்காமல் 14 பேரை ஈராக்தூக்கிலிட்டது. உளவுபார்த்தகுற்றத்தின்மீது மேலும் பலர் ஈராக்கில் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இஸ்ரேலியர் காட்டுமிராண்டித் தனமாக அரபுப் பிரஜைகளைக் கொடுமைப்படுத்துவதாக இப்பொழுதுஈராக் ஐ.நா.விடம் புகார் செய்து அப்படியான சம்பவங்கள் மேலும் இடம்பெருமல்தடுக்கும்படியும் கோரிக்கைவிடுத்துள்ளது.

## அயூப் தங்கிய கவர்னர் வீட்டின்முன் ஆர்ப்பாட்டம

லாகூர், பெப். 13

லாகூரில் கவர்னர் மாளிகையின்முன் நேற்று மாணவர்களும் எதிர்க்கட்சியாளர்களும் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பொலிசார் தடியடிப்பிரயோகம் செய்தனர்.

கவர்னர் மாளிகையில் அதிபர் அயூப்கான் தங்கியிருந்த போது இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன, குழப்பம் ஏற்பட்ட போது அதை அடக்க ராணுவமும் அழைக்கப்பட்டது. இதில் 40 பேர் காயமடைந்தனர்.

## இப்படி வாக்களித்தார் ஒருவர்

புதுடில்லி, பெப். 13

பீகார் தேர்தலில் ஹஜாரிபாக் வாக்காளர் ஒருவர் தனது வாக்குச் சீட்டின் குறுக்கே பெரிய எழுத்துக்களில் தான் ராஷ்டிரபதி ஆட்சி நீடித்து நடைபெற விரும்புவதாக எழுதி வாக்களித்திருந்தார். வாக்குகள் எண்ணப்படும்போது "ராஷ்டிரபதி ஆட்சி"க்கு வாக்களித்தவரின் வாக்குச் சீட்டு கண்டுபிடிக்கப்பட்டு அது செல்லுபடியாகதெனத் தேர்தல் அதிகாரியால் அறிவிக்கப்பட்டது.

## அண்ணு மறைவுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கவலை

சென்னை, பெப். 13

தமிழ்நாடு காங்கிரஸ் காரியக்கமிட்டி திரு. அண்ணுத்துரையின் மறைவுக்கு அண்மையில் அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியதோடு கீழ்வெண்மணி சம்பவம் பற்றியும், நாகர்கோவில் இடைத்தேர்தல் முடிவு குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளது. தமிழக அரசியல் நிலைமை பற்றி விவாதிக்கப்பட்ட இக்கூட்டத்தில் தி. மு. க. மந்திரிசபைமீதுசட்டசபையில் கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானத்தை வாபஸ் பெறுவது குறித்து விவாதிக்கப்படவில்லை எனச் செய்தி நிருபர்களிடம் திரு. சி. சுப்பிரமணியம் தெரிவித்தார். தி. மு. க. மந்திரிசபை மீது கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானத்தைக் காங்கிரசார் வாபஸ் பெறுவார்கள் எனத் தான் நம்புவதாக நிருபர்கள் கூட்டத்தில் புதிய முதலமைச்சர் திரு. கருணநிதி தெரிவித்திருந்தார். இதுகுறித்து திரு. சி. சுப்பிரமணியம் கருத்துத் தெரிவிக்கையில் கண்டனத் தீர்மானத்துக்கு அடிப்படையானது கீழ்வெண்மணி சம்பவம் எனவும் இதுபற்றி விரிவாக விவாதிக்க கண்டனத் தீர்மானமொன்றே வழியாதலால் கண்டனத் தீர்மானம் விவாதிக்கப் படுவதையே தாம் விரும்புவதாகவும் எத்திவைக்கப்பட்ட அசெம்பிளி கூட்டத்தில் கவர்னர் உரை விவாதம் தொடர்ந்து நடைபெறுமாயின் கண்டனத் தீர்மானமும் விவாதிக்கவேண்டிய ஒரு விஷயமாகுமெனத் தெரிவித்தார்.

## கோடி நெஞ்சங்களிலும் நிறைந்துள்ளார் அண்ணு

பண்டிதர் இரத்தினம்

## கருணநிதி அமைச்சரவை விஸ்தரிக்கப்பட்டது

### ஆதித்தனருக்கும் பதவி

சென்னை, பெப். 13

**தமிழ்நாடு அமைச்சரவையில் மேலும் நான்கு புதியவர்களை முதலமைச்சர் சேர்த்துக் கொண்டுள்ளார்.**

முன்னுள் தமிழ்நாடு கீழ் சட்டசபைசபாநாயகர் திரு. எஸ்.பி.ஆதித்தன், திரு.பி.யு.சண்முகம், திரு.கே.வி.சுப்பையா, திரு.ஓ.பி. ராமன் ஆகியவர்களே அந்நால்வரும்.

திரு. கருணநிதி நேற்றிரவு கவர்னர் மாளிகைக்குச் சென்று தமது புதிய அமைச்சர்களின் பெயர்ப்பட்டியலை கவர்னரிடம் சமர்ப்பித்தார். பின்னர் பத்திரிகை நிருபர்களை அழைத்து தமது புதிய

## ஸ்மித் வாக்கெடுப்பு நடத்துவாராம

சாலிஸ்பரி, பெப். 13

ரொடீஷியாவில் புதிய அரசியல் திட்டம் பற்றி பொது வாக்கெடுப்பு ஒன்று மே மாதத்தில் நடைபெறும் என்று சட்ட விரோத ஆட்சியாளர் திரு. அயன்ஸ்மித் அறிவித்துள்ளார்.

## ஏற்றுமதி

பண்டத்தரிப்பு. வெள்ளி

இளவாலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வெங்காயத்துக்கான புதிய கட்டட வேலைகள் பூத்தியாகாதபடியால் வெங்காய ஏற்றுமதி வேலைகள் முள்ளானை புகையிலைச் சங்க கட்டடத்தில் நடைபெறுகின்றன.

## திருநாள்

பண்டத்தரிப்பு, வெள்ளி

இம்மாதம் 19-ம் திகதி கத்தோலிக்க ஆலயங்களில் விபூதித் திருநாள் கொண்டாடப்பட விருக்கிறது. இதனையிட்டு ஆலயங்களில் விசேஷ சடங்கு ஆராதனை நடைபெறவிருக்கிறது.

# கூட்டுறவு இயக்கத்தில் சேர நாணயமுள்ளவர் தயங்குகிருர்கள்

## விசாரணைச் சபை முன் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியா.

'மக்கள் வங்கிப் பங்குகள் யாவும் கூட்டுறவு இயக்கத்தின் சொத்தாயிருத்தல் வேண்டும். மக்கள் வங்கியிலே வணிக வங்கித் தொழிலுக்கும், கூட்டுறவுத் துறைக்குமென இரு பகுதிகள் இருத்தல் வேண்டும்.'

இவ்வாறு இரண்டாம் நாள் நடைபெற்ற கூட்டுறவு ரேயல் விசாரணைக் கமிஷனுக்கு யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கியும், வவுனியா, மன்னர் கூட்டுறவு மாகாண வங்கிகளும் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளன.

இம்மாகாண வங்கிகள் மேலும் மாவட்ட அடிப்படையிலே கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதிஉதவி வழங்க கூட்டுறவு மாகாண வங்கி தயாராயிருத்தல் வேண்டுமெனவும் சுட்டிக் காட்டின.

வடபகுதி விவசாய விளைபொருள் சமாச உற்பத்திச் சங்கத் தலைவர் திரு. என். சிவஞானம் சாட்சியமளிக்கையில், பெரிய சங்கங்கள் நிறுவப்பட்டால் நடைமுறையில் பல நெருக்கடிகள் தோன்றக்கூடுமென தாம் அஞ்சுவதாயும், வடபகுதியில் கூட்டுறவு இயக்கம் உச்சத்தை அடையவில்லையென்றும் கூறினர்.

அவர் மேலும் கூறும் போது, கூட்டுறவு இயக்கத்தில் நாணயமுள்ளவர்கள் சேர்ந்து பாடுபடத் தயங்குகிருர்கள். அகில இலங்கை விளைபொருட் சங்கத்தில் தமது சமாசம் அங்கத்துவம் வகித்த போதும், அச்சம்மேளனத்திஞல் அதிக நன்மையடையவில்லையென்றும் கூட்டுறவு வங்கிகளுக்கு நேரடியாக மத்திய வங்கி கடன் உதவி வழங்கவேண்டுமென்றும் மக்கள்வங்கி தரகர் போன்று அவற்றுக்கு நடுவே நிற்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

**கடன் மீட்பதில் கஷ்டம்**

வடபகுதி புடவைச்சங்கங்களின் சமாசச் செயலாளர் திரு. து. சீனிவாசகம் சாட்சியமளிக்கையில் தமது சமாசம் சில அங்கத்துவ சங்கங்களுக்குக் கொடுத்த கடன்களைத் திருப்பிப்பெறுவதில் கஷ்டப்படுவதாகவும் தமது சங்கங்களுக்கும் நெசவாளருக்கும் உதவக்கூடிய

தகைய நன்மையும் ஏற்படவில்லையென்றும் கடல் அட்டை ஏற்றுமதி செய்வதற்கு எமது சங்கத்திற்கு அரசாங்கம் ஏகபோக உரிமை வழங்கப்பட்டிருந்த போதிலும் கடல் அட்டை ஏற்றுமதி செய்வதில் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு மீன்பிடி கூட்டுஸ்தாபனம் உடந்தையாக இருக்கின்றதாகவும், மீன் விற்பனையை வெற்றிகரமாக முடிக்க குளிர்சாதனமும், போக்குவரத்து வசதியும் தடையாக இருக்கின்றதென்றும் வெற்றிகரமான மீன் விற்பனையை நடாத்த சர்வதேச கூட்டுறவு இணைப்பு ஸ்தாபனத்தின் உதவியை நாடியிருப்பதாயும் தெரிவித்தார்.

**மாற்றம் தேவை**

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாஜ சார்பில் திரு. கு. நேசையா சாட்சியமளிக்கையில் யாழ். நகரத்தின் கூட்டுறவு அமைப்பினை மாற்றியமைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், பல கிளைகளைக் கொண்ட பெரிய சங்கத்தினை யாழ்ப்பாண நகருக்கு அமைப்பதே பொருத்தமானதெனவும் இத்தகைய அமைப்பு கிராமப்புறத்திற்குப் பொருந்தாதெனவும் சுட்டிக் காட்டினர். (ந நி)

# 'கல்லூரிப் படிப்பால் மட்டும் அறிவு வளர்ந்துவிடாது'

## கோணந்தோட்ட சனசமூக நிலைய விழாவில் மேயர்

யாழ்ப்பாணம். வெள்ளி

'கல்லூரிகளில் படிப்பதால் மட்டும் அறிவுவளர்ந்துவிடாது. அறிவை வளர்த்து விடவும் முடியாது. இதற்கு ஜனசமூக நிலையங்களின் பங்கும் கூடுதலாக வேண்டும். ஜனசமூக நிலையங்களதும், நூல் நிலையங்களதும் வளர்ச்சிக்காக என்னுல் இயன்ற உதவிகளை மாநகரசபை மூலம் நான் செய்ய முன்வருவேன்.'

யாழ்ப்பாணம் கோணந்தோட்ட சனசமூக நிலையத்தின் முதலாவது ஆண்டு விழாவில் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பேசிய யாழ் நகர முதல்வர் திரு. எஸ். நாகராசா இவ்வாறு தெரிவித்தார்.

மாநகரசபை உறுப்பினரான திரு. கே. வி. தெய்வேந்திரமும் திரு. எஸ். நாகராஜாவும் குத்து விளக்கை ஏற்றி வைத்ததுடன் விழா ஆரம்பமானது. நகர முதல்வர் மேலும் பேசுகையில் மானிப்பாய் கோணந்தோட்ட வீதியை ஆஸ்பத்திரி வீதியுடன் இணைப்பதாக வாக்குறுதியளித்தார்.

'ராஜா' தியேட்டர் உரிமையாளர் திரு. சி. தியாகராஜா வரவேற்புரை நிகழ்த்தினர். சனசமூக நிலையத்தின் புதிய கட்டிடத்தை நிறுவுவதிலும்அதன் வளர்ச்சியிலும் கூடிய அக்கறை காட்டியதாக திருவாளர்கள் இரா பற்குணம், சதாசிவம் ஆகிய இருவரது சேவையைப் பலரும் பாராட்டிப் பேசினர்கள்.

கவிஞர் இ. நாகராஜன் திருவாளர்கள் தர்மானந்தராஜா. சபா. செந்தில்ராஜா, தா. சு. லோகநாதன், இரா. பற்குணம் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்கள். திரு. சதாசிவம் நன்றி தெரிவித்தார்.

(கா.நி)

## அஞ்சலி

உடுப்பிட்டி, வியாழன்

வதிரி சமசமாஜ வாலிப முன்னணியால் அண்ணு பிரிவுக்கு அனுதாபம் தெரிவித்து அஞ்சலிக் கூட்டம்

## கம்யூ. வாலிபர் சங்கம் மேயருக்கு மகஜர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ரவு கவர்னர் மாளிகைக்குச் சென்று தமது புதிய அமைச்சர்களின் பெயர்ப்பட்டியலை கவர்னரிடம் சமர்ப்பித்தார். பின்னர் பத்திரிகை நிருபர்களை அழைத்து தமது புதிய அமைச்சர்களின் இலாகாக்களையும் அறிவித்தார.

திரு. மதியழகனுக்கு, நிதியிலாகாவும்திட்டமிடல்,மற்றும் வெளிநாட்டிலுள்ள பாரத நாட்டவர் விஷயங்களும் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. திரு. கோவிந்தசாமியிடம் உணவுஇலாகாவும், திருமதி சத்தியவாணிமுத்துவிடம் பொது, சுகாதார இலாகா, ஹரிஜன நல இலாகாவும் கையளிக்கப்பட்டுள்ளன. திரு. மாதவன் தொழில், கல்விப்பகுதிக்கு பொறுப்பாகவிருப்பார். திரு ஆதித்தனுக்கு போக்குவரத்தும், திரு.சாதிக்பாட்சாவிடம் சமுதாய நலமும், பி. யு. சண்முகத்திடம் தொழிலாளர் நலமும், கே. வி.சுப்பையாவிடம் அறநிலைய பாதுகாப்பும், திரு. ஓ. பி. ராமனிடம் மின்சார இலாகாவும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அமைச்சர்களில் பலரும் வெளியூர்களில் இருப்பதால் இன்றுஅவர்கள் தலைநகர் வந்து பதவிப்பிரமாணம் எடுப்பார்கள்என்றும் முதலமைச்சர் கூறினார்.

மே மாதத்தில் நடைபெறும் என்று சட்ட விரோத ஆட்சியாளர் திரு. அயன்ஸ்மித் அறிவித்துள்ளார்.

விபூதித் திருநாள் கொண்டாடப்பட விருக்கிறது. இதனையிட்டு ஆலயங்களில் விசேஷ சடங்கு ஆராதனை நடைபெறவிருக்கிறது.

# மாணவர் கட்டுப்பாடின்மை:

## தமிழ்நாடு கவர்னர் தெரிவிக்கும் யோசனை

புதுடில்லி, பெப்,13

மாணவர்களிடையே கட்டுப்பாடின்மை நிலவுகிறதெனவும் அவர்கள் பெரியோர்களுக்கு மரியாதை செலுத்துவதில்லை யெனவும் எஸ். ஐ. இ. டி. கல்லூரியின் ஸ்தாபகதின விழாவுக்குத் தலைமைதாங்கிப்பேசிய தமிழ்நாடு கவர்னர் உஜ்ஜல்சிங் குறிப்பிட்டார்.

அவர்மேலும்பேசுகையில், 'மாணவர்களின் இத்தகைய போக்குச் சீர்திருந்த இப்பொழுது கல்வி நிலையங்களில் முக்கியத்துவம்பெருத சன்மார்க்க போதனைகள் முக்கியத்துவம் பெறவேண்டும். சன்மார்க்க போதனைகள் நடைபெற்ருல் இளைஞர்களும் புலவர்களும் பழைய நமது பண்புகளைக் கைவிடாது அதன்படி ஒழுக வழிவகுக்கும். கல்வித்துறையில் குறைந்து காணப்படும் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்க முயற்சி எடுக்கப்படவேண்டும். அவர்களின் அந்தஸ்தை சகல துறைகளிலும் உயர்த்தவேண்டும். பொருளாதாரத் திட்டங்களை நாம் செயல்படுத்திக் கொண்டிருப்பதால் அது வெற்றிபெற சமூக சேவை முக்கியமெனவும் பெண்களிடம் நற்பணிகளைச் செய்துமுடிக்கக்கூடிய பண்புகள் உள்ளதால் அவர்களுக்கு கல்வியோடுசமூகசேவையில் பயிற்சிவும் அளிக்கப்பட்டால் நாட்டிற்குச் சிறந்த சேவை செய்வார்கள்'' எனக் கூறினார்.

# ... கோடி நெஞ்சங்களிலும் நிறைந்துள்ளார் அண்ணா

## பண்டிதர் இரத்தினம்

கிளிநொச்சி, புதன்

''மூவேந்தர் ஆட்சிக்குப் பின், தமிழர்கள் தங்களை ஆண்டுகொண்டார்களே யென்ருல் அதற்கெல்லாம் முழுமுதற் காரணம் பேரறிஞர் அண்ணாவேயாகும். உலகத்திலே வாழும் ஆறு கோடி தமிழ்மக்கள் நெஞ்சங்களிலும் நிறைந்து நிற்கின்ருர் அண்ணா. தமிழர்கள் சமுதாயத்திலே புரையோடியிருந்த சாதிக் கொடுமையைத் தகர்த்தெறிந்தார். சட்டமாக்கமுடியாதென்று கூறியவர்களுக்கும் கலப்புத் திருமணத்தை சட்டமாக்கித் தமிழகத்தில் சாதி வெறியை அறவே நீக்கிவிட்டார். இராஜாஜி ஆட்சியின்காலந்தொடக்கம் தனது ஆட்சி ஆரம்பகாலம் வரை இந்தியை எதிர்த்தார். இந்தியைத் தமிழ் நாட்டில் நுழையவிடமாட்டேன் என்று சூளுரைத்தார்.''

இவ்வாறு கிளிநொச்சியில் இலங்கை கமத்தொழிலாளர் சங்கத்தினல் அறிஞர் அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக நடைபெற்ற கூட்டத்தில் தலைமை வகித்துப்பேசிய கிளிநொச்சி எம் பி பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினார்.

திரு. இரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''அறிஞர் அண்ணா தமிழர்கள் எல்லோரும் இதயம் குளிர, ஒரு தமிழ்நாட்டையே பெற்றுத் தந்தார். இது அண்ணாவின் முயற்சியாலேயே கிடைத்தது' என்பதை யாரும் மறக்கமுடியாது.

பேரறிஞர் அண்ணா சுகவீனமுற்றிருந்தபோது தமிழ் பேசும் மக்கள் அனைவரும் வருத்தமுற்றிருந்தனர். அவரது உடலில் ஊசிகள் பாய்ச்சப்பட்டபோது தங்கள் சரீரத்தில் பாய்ச்சப்பட்டதாக எண்ணினுர்கள். அண்ணா இறந்தபோது தங்களையே இழந்துவிட்டார்கள். அண்ணாவின் மறைவினுல் இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் ஆழ்ந்த துயரத்திற்குள்ளாகி உள்ளார்கள். அவரின் பிரிவு குறித்து இலங்கையின் பல பாகங்களிலும் அனுதாபம் தெரிவிக்கப்படுகின்றது. தமிழர்களின் உள்ள உணர்ச்சி செத்துவிடவில்லை என்பதும் தமிழ்பேசும் மக்கள் மானத்தோடு வாழ்கின்ருர்கள் என்பதும் இப்போது நாம் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.''

மலர் மாலைகளாலும் தி. மு. க. கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்ட அண்ணாவின் உருவப் படம், இலங்கை கமத் தொழிலாளர் சங்கக் காரியாலயத்திலிருந்து மோட்டார்ரதத்தில்மௌனமான ஊர்வலத்துடன் கூட்ட மைதானத்தை வந்தடைந்தது. மிகவும் அமைதியான முறையில் நடைபெற்ற இவ்வூர்வலத்தில் பெருந் திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

கூட்டம் மிக அமைதியாகவும் கவலையாகவும் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் உணர்ச்சிவசப்பட்ட ஒரு பெண்மணி கவலைதாங்காது ஓலமிட்டு அழத்தொடங்கிவிட்டார். இம்மங்கையின் கவலை உணர்ச்சியைப் பார்த்த அநேக மக்கள் மனதில் கூடிய கவலையைக் கொடுத்த காட்சி எல்லோரின் மனதையும் உருகச் செய்தது.

இக்கூட்டத்தில் ஆசிரியர் புதுமைலோலன், திரு. க. கணேசலிங்கம், சோ. சேனுதிராசா, மு. சுப்பிரமணியம், ஆசிரியை வேலுப்பிள்ளை, அன்னலட்சுமி ஆகியோரும் உரையாற்றினர்.

...சமாசம் சில அங்கத்துவ சங்கங்களுக்குக் கொடுத்த கடன்களைத் திருப்பிப்பெறுவதில் கஷ்டப்படுவதாகவும் தமது சங்கங்களுக்கும் நெசவாளருக்கும் உதவக்கூடிய வகையிலே ஓர் அகில இலங்கைச் சம்மேளனம் நிறுவப்பட வேண்டுமென்றும் பிடவைகளை விற்பதில் தமது சமாசத்திற்கு எத்தகைய நெருக்கடியும் ஏற்படவில்லையென்றும் 'மின்' தறிகளில் உற்பத்தி தொடங்கும் காலங்களில் விற்பனை செய்வதில் பிரச்னை ஏற்படுகின்றதென்றும் தெரிவித்தார்.

**மீனவருக்கு நன்மை கிடைக்கவில்லை**

வடபகுதி மீன்சங்க சமாசத் தலைவர் திரு.எஸ்ஸ்ரணி. ஸ்லோல் சாட்சியமளிக்கையில் வடபகுதி மீன் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தால் இப்பகுதி மீனவருக்கு எத்

கள் பெற்றுக் கொடுத்த முதலமைச்சர் அண்ணாவின் மறைவு தமிழ்நாடு மக்களுக்கு மகத்தான நஷ்டமாகும். அவரது சுய நலமற்ற தமிழ்ப்பணியினுலேயே உலகத் தமிழர்கள் கண்ணீர் வடிக்கின்றனர்,'' என்றுகூறினார்.

திருவாளர்கள் எஸ். ஆறுமுகம், அ. தேவச்சந்திரன், கே. எஸ். இராஜசிங்கம் ஆகியோரும் பேசினர். மூன்று நிமிடமௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

# அஞ்சலி

உடுப்பிட்டி, வியாழன்

வதிரி சமசமாஜ வாலிப முன்னணியால் அண்ணா பிரிவுக்கு அனுதாபம் தெரிவித்து அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

வடபிரதேச சமசமாஜ வாலிப முன்னணித்தலைவர் டாக்கர் திரு. எஸ். எஸ். மாசிலாமணி தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. திருவாளர்கள்: எஸ். கமலநாதன், ஆர்.கே. நடராசா, எஸ் கே. யோகநாதன் ஆகியோரும் பேசினர்.

இரு நிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

# கம்யூ. வாலிபர் சங்கம் மேயருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், வெள்ளி

மின்சாரக் கம்பத்தினூடாக நிலத்தினுள் பாய்ந்த மின்சாரம் ஒரு மாட்டைப் பலிகொண்ட சம்பவமொன்று கடந்த சனிக்கிழமை வண்ணை வைத்தீஸ்வராச் சந்தியில் நடந்துள்ளது. இதில் தெய்வாதீனமாக மாட்டுவண்டிச் சாரதி உயிர் தப்பினா.

மழை காலங்களில் யாழ். நகரிலுள்ள மின்சாரக் கம்பங்களினூடாக மின்சார விபத்துக்கள் பல முன்பு ஏற்பட்டிருக்கின்றன. பொது மக்களுக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய இவ்வித குறைகளை நீக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு வண்ணை மேற்குகம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் யாழ்நகர் மேயருக்கு மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளது. அதன் பிரதிகள் சில மாநகரசபை உறுப்பினகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ந. நி)

# அண்ணாவுக்கு மாணவர் அஞ்சலி

உடுப்பிட்டி, வியாழன்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆண்கள்விடுதி மாணவர் மன்றத்தினரால் அமரர் அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

திரு. அண்ணாதுரையின் மறைவுக்கு அனுதாபம்தெரிவித்து நடைபெற்ற இக்கூட்டத்தில் இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. மாணவமன்றத்தின் வெளியீடான ''விடுதியின் குரல்'' அண்ணாவின் உருவப் படத்துடன் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# பிரிட்டிஷ் அரசின் நைஜீரிய கொள்கை

## பிரி. பிரதமர் முன் மே. ஜெர்மன் மாணவர் ஆர்ப்பாட்டம்

பொன், பெப்.13

பொன் நகரில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் நேற்று பிரிட்டிஷ் பிரதமர் தங்கியிருக்கும் மாளிகையின் முன்னுல் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினுர்கள்,

நைஜீரியாவில் விடுதலை வீரர்களை அழிக்க பிரிட்டன் ஆயுதங்கள்கொடுத்து உதவுவதை இந்த மாணவர்கள் கண்டித்து கூச்சல் போட்டார்கள்.

மேற்கு பெர்லினில் ஜனுதிபதி தேர்தலை நடத்தமேற்கு ஜெர்மன் செய்துள்ள முடிவுக்கு பிரிட்டிஷ் பிரதமர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

'நேட்டோ' ஒப்பந்தநாடுகளுக்கிடையில் மேலும் உறவுகளைப் பலப்படுத்தவேண்டுமென்றும் ஐரோப்பிய நாடுகள் மேலும் நெருங்கிசெயல்படுத்த வேண்டுமென்றும் மேற்கு ஜெர்மன் அதிபர் கீஸிங்கரும் பிரிட்டிஷ் பிரதமர் வில்சனும் கருத்துவெளியிட்டிருக்கின்றனர்.

உலக விவகாரங்களில் மேற்கு ஐரோப்பியநாடுகள் அதிகபங்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இருவரும் உறுதி தெரிவித்துள்ளனர்.

கிழக்கு ஜெர்மனி எத்தனை முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தினுலும் மேற்கு பெர்லின் ஜனுதிபதி தேர்தலை நடத்துவதென மேற்குஜெர்மனி செய்துள்ள முடிவை மாற்றப்போவதில்லை என்று அறிவித்துள்ளது.

மேற்கு பெர்லினில் ஜனுதிபதி தேர்தலை மேற்கு ஜெர்மன் நடத்தவிருப்பதைதடுக்கும்படி அமெரிக்காவுக்கு கிழக்குஜெர்மனி விடுத்த கோரிக்கையை அமெரிக்க அரசாங்கம் புறக்கணிக்கவிருப்பதாகவும் அறியப்படுகின்றது.

அடுத்த வாரத்தில் மேற்கு ஜெர்மனிக்குஅமெரிக்க ஜனுதிபதி திரு.நிக்ஸன் விஜயம் செய்யவிருக்கிருர். தற்பொழுது பொன்னில் இருக்கும் பிரிடிட்டிஷ்பிரதமர் நாளைய தினம் மேற்கு ஜெர்மனிக்குப் போவார்.

# நினைவு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

தியாகி இரத்தினம் நினைவு விழா இன்று மாலை 4 மணிக்கு மந்துவில் ருேமன் கத்தோலிக்க பாடசாலைக்கு அருகாமையில் ஆசிரியர் திரு. க. நடராசா தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

இவ் விழாவில் கோப்பாய் எம்.பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், வித்துவான் எம். சபாரத்தினம். திரு. வி, ஏ. கந்தசாமி, திரு. கி. பற்குணம், திரு. வி. நாகலிங்கம் ஆகியோர் பிரதமபேச்சாளராகக் கலந்து கொள்ளுவார்கள். திரு. இரத்தினத்தின் நினைவுமலர் வெளியிடப்படவிருப்பதுடன் பல கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன.

(ந. நி)

# தமிழர் உரிமை தேடியவர்

உடுப்பிட்டி, வியாழன்

''ஈழத்தமிழர்கள் உரிமைகள் பறிக்கப்பட்டும், வேலை நீக்கம் செய்யப்பட்டும் இன்று பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். ஆனுல் தமிழகத்திலே தமிழன் பெருமையையும், புகழையும் நிலைநாட்டித் தமிழன் மானத்தைக் காப்பாற்றியவர் அண்ணா. அண்ணாவைப் போன்றவர் ஈழத்தமிழர்கள் மத்தியில் இருந்தால் நாம் இத்தனை கஷ்டங்களையும் அனுபவிக்கவேண்டி நேரிட்டிராது''

இவ்வாறு உடுப்பிட்டித் தமிழ் மன்றத்தினரால் நடாத்தப்பட்ட அமரர் அண்ணா அனுதாபக்கூட்டத்தில் பேசுகையில் பொதுச் செயலாளர் திரு. ஜே. ஜெயக்குமார் கூறினுர்.

இக்கூட்டத்திற்குத் தலைமைவகித்த டாக்டர் ஆ. திருச்சிற்றம்பலம் பேசுகையில், ''இந்திய மக்களின் ஒருமைப்பாட்டை நிலை நிறுத்திப்போராட்டங்கள்மூலம் தமிழ் மக்களுச்கு உரிமை...

# 'சைவத் தொண்டர்'

உடுப்பிட்டி, வியாழன்

மதம் ஒருவருக்குச் சொந்தமானதல்ல. மதம் புனிதமானது, மதத்தை மாசுபடுத்த முயல்பவர்களையே களையவேண்டும் என்ற கொள்கையுடன் வாழ்ந்தவர் அமரர் அண்ணா. அவர் ஆட்சிக்கு வந்ததும் மதங்களை செம்மைப்படுத்தியதே அவர் செய்த முதற்கடமையாகும். பூஜை நடவாதிருந்த ஆலயங்களில் மூன்று நேரமும் பூஜைகள் நடக்க ஒழுங்குகள் செய்ததின் மூலம் அவர் இந்துசமயமக்களின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக் கொண்டார். அண்ணா அரசியலுக்கு மட்டுமல்ல, தமிழுக்கு மட்டுமல்ல சைவத்துக்கும் பெரும் தொண்டாற்றியுள்ளார்.'

மேற்கண்டவாறு கரணவாய் வடக்கு நவிண்டில் கிராமமுன்னேற்றச் சங்க சனசமூக நிலையத்தில் நடைபெற்ற அண்ணா அனுதாபக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் சட்டக் கல்லூரி மாணவர் திரு. மகாதேவா கூறினுர்.

மற்றும் பலரும் பேசினர்.

# இமையாணனில் அண்ணாவுக்குசிலை

உடுப்பிட்டி,வியாழன்

அறிஞர் அண்ணாவுக்கு இமையாணனில் சிலை அமைக்க இமையாணன் வாலிப முன்னணி தீர்மானித்துள்ளது. அமரர் அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இமையாணன் வாலிப முன்னணியினரால் இமையாணன் அரசினர் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டது.

இந்த அனுதாபக் கூட்டம் உடுப்பிட்டிக் கிராமசபை அங்கத்தவர் திரு.க. அப்புக்குட்டி தலைமையில் நடைபெற்றது. கூட்ட ஆரம்பத்தில் நூற்றுக்கணக்கானேர் அடங்கிய மௌன ஊர்வலமொன்று நடைபெற்றது. ஊர்வலத்தில் சென்ருேர் அண்ணாவின்உருவப்படத்தைத் தாங்கிச் சென்றனர்.

தமிழுக்கும் தமிழினத்துக்கும் வழிகாட்டியாக விளங்கிய அறிஞர் அண்ணாவுக்குச் சிலை அமைப்பதென்றும் இச்சிலையைக் கிராம முன்னேற்றச் சங்கத்தின் அனுமதியோடு பொதுவான இடத்தில் நிறுவுவதென்றும். வள்ளுவருக்கு விழாவெடுப்பது போல் ஆண்டுதோறும்அண்ணாவுக்கு விழாவெடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஆசிரியர் திரு. இ. வல்லிபுரம், வைத்தியர் திரு. கு. சிவசம்பு, திருவாளர்கள் த. இளங்கீரன், சி., தெய்வேந்திரம், க. தங்கராசா, சு. அரசலிங்கம், நி.சோதி, கி. தியாகராசா, க. சின்னத்தம்பி ஆகியோரும் பேசினர்.

# புத்துயிர் அளிக்கும்

சுழிபுரம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் கிளித்தட்டு விளையாட்டுக் கழகம் ஒன்று விரைவில் உதயமாக இருக்கின்றது. சித்திரை புத்தாண்டுடன் இக்கழகம் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் கிளைகளை நிறுவவுள்ளது. தமிழரின் தேசிய விளையாட்டுகளில் ஒன்ருன கிளித்தட்டுக்குப் புத்துயிர் அளிப்பதே இதன் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நான் செய்ய முடியாததை பிறரை செய்யும்படி தூண்டுவதில்லை. சாதிக்கக் கூடியவற்றையே சொல்லுகின்றேன். இதனால்தான் மனிதவர்க்கம் சிறப்படைய முடியும் என நம்புகின்றேன்.

—மகாத்மாகாந்தி.


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 3-ந் திகதி
(14 - 2 - 69)


## சுங்க இலாகாவும் அமைச்சரும்

சுங்க இலாகா அதிகாரிகள் சிலரைப்பற்றி ஓர் அமைச்சர் பிரதம மந்திரியிடம் புகார் தெரிவித்திருப்பதாகவும் இந்த அமைச்சரைப் பற்றி சுங்கப்பகுதியினர் பிரதமருக்குப் புகார் தெரிவித்திருப்பதாகவும் சுங்கப்பகுதியினரும் அமைச்சரும் சம்பந்தப்பட்ட இந்த 'விஷயம்' பற்றி ஆட்சிமன்றத்தில் எதிர்க்கட்சியினர் பிரச்னையைக் கிளப்பப் போவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இச் சம்பவம்பற்றிய உண்மைகளை ஆராய்ந்து அதற்கேற்ற நடவடிக்கைகளைப் பிரதமர் மேற்கொள்ள வேண்டியது மட்டுமல்லாது இதைப் பொதுமக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

குறிப்பிட்ட அமைச்சர் சமீபத்தில் வெளிநாடு சென்று திரும்பியபோது, விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் "மிக முக்கியமான மனிதர்கள்" என்ற வரிசையில் அமைச்சரைப் பரிசோதனை செய்யவில்லை. ஆனால் அவருடன் வந்த அவரது மிக நெருங்கிய உறவினரின் பெட்டி படுக்கைகளை சுங்க அதிகாரிகள் சோதனையிட்டதாகவும் அப்போது அவர்களிடம், அவர்கள் அறிவிக்கத் தவறிய சில பொருள்கள் இருந்ததாகவும் கூறப்படுகிறது. இச்சம்பவம்பற்றி நிதிஅமைச்சர் மூலம் பிரதருக்கு சுங்க அதிகாரி தெரிவித்திருக்கிறார். இதேசமயம் தம்மை விமானநிலையத்தில் வீணாகத் தாமதப்படுத்திவிட்டார்கள் என்று சுங்கப்பகுதியினர்மீது சம்பந்தப்பட்ட அமைச்சர் பிரதமரிடம் புகார் செய்திருக்கிறார். இந்த விஷயத்தில் சுங்கப்பகுதியினர் அமைச்சரைத் தாமதப்படுத்தவில்லை. அமைச்சர் தமது உறவினருக்காகத் தாமாகவே தாமதித்திருக்கிறார்.

நமது சுங்கப் பகுதியினர் நடந்துகொள்ளும் முறை பற்றி இதுவரை யாரும் நல்ல வார்த்தை சொன்னதில்லை. இங்கு வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் வருவதற்குத் தயங்குவதே சுங்கப்பகுதியினர் சிலர் நடந்துகொள்ளும் முறைதான் காரணம். இங்கிருந்து வெளிநாடு செல்லும் மக்கள் தமது பிரயாண நினைவுக்காக வாங்கி வரும் பொருள்கள்கூட வீடு வந்து சேருவது பெரும்பாடு. "எத்தனை சேலைகள் கொண்டு போனாய்?, எத்தனை சேலை நீ அணிவாய்?" என்பன போன்ற அற்பத்தனமான கேள்விகளும் இங்கு தான் கேட்கப்படுவது வழக்கம். இதுபோன்ற கேள்விகளை மட்டுமல்ல, சுங்கப்பகுதியினர் பிரயாணிகளைப் படுத்தும் பாட்டையும், பிரயாணிகள் அனுபவிக்கும் கஷ்டங்களையும் அமைச்சர்களும் மிக முக்கியமான மனிதர்களும் அறிந்துகொள்ள வாய்ப்புக் கிடைப்பதில்லை. சாதாரண மக்களுக்கு உள்ள சட்டம் பிரமுகர்களுக்கும், அமைச்சர்களுக்கும் விலக்களிக்கக் கூடாது. சட்டத்தின் பார்வையில் அனைவரும் சமமே. இவ் விஷயத்தில் அமைச்சர் ஒருவர் நேரடியாகக் கஷ்டத்துக்குள்ளாகாவிட்டாலும், அவர் மற்றவர்களின் கஷ்டத்தை உணர்ந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்திருக்கிறது, அமைச்சர்கள், பிரமுகர்கள் அனைவருக்கும் விதிவிலக்கில்லாது சுங்கப் பரிசோதனை நடைபெற்றால் பிரயாணிகளின் கஷ்டம் ஓரளவுக்குக் குறையலாம்.

## நல்ல வெற்றி

யாழ்ப்பாணத்திலே பனம் சாராயம் வடிக்கும் தொழிற்சாலையை அமைக்கும் யோசனையை, அரசாங்கம் கைவிட்டு

ளுக்கு நல்ல தல்லவென்று சுட்டிக்காட்டினோம். பின்னர் இந்துசமய ஸ்தாபனங்களின் சார்பாக ஒரு தூதுக்கோஷ்

## சிவராத்திரி விழா ஏற்பாடுகள்

**உருத்திரபுரத்தில்**

உருத்திரபுரம், வெள்ளி

உருத்திரபுரம் புராதன சிவாலயத்தில் இம் மாதம் 15-ம் திகதி சனிக்கிழமை மகா சிவராத்திரி விழா கொண்டாடப்பட விருக்கிறது. அன்றைய தினம் 7 மணி தொடக்கம் புராண படனமும் பூஜையும், 4 சாமங்களிலும் ஆராதனைகளும் சமயச் சொற்பொழிவுகளும், பக்திப்பாடல்களும் நடைபெறும்.

**வவனிக்குளத்தில்**

சிவபுரம், வெள்ளி

வவனிக்குளச் சிவாலயத்தில்கொண்டாடப்படும்மகா சிவராத்திரி விழாவில் நடை பஜனை ஊர்வலங்கள் நடைபெறவிருக்கின்றன, காலைதீர்த்தோற்சவமும், மாலை சமயச்சொற்பொழிவுகளும்திருமுறை ஓதல், இன்னிசைக் கச்சேரியாகியன இடம் பெறும்.

**கரணவாயில்**

உடுப்பிட்டி, வெள்ளி

கரணவாய் வடக்கு நவிண்டில் பூதராயர் பிள்ளையார் கோவிலில் மகா சிவராத்திரி விழா நடைபெறுமன்றைய தினம் கோவில் முன்றலில் வட கருணை வளர்மதிநாடக மன்றத்தாரின் 17-வது வெளியீடான காத்தவராயர் என்னும் நாடகம் அரங்கேற்றப்படும்.

**கோப்பாயில்**

கோப்பாய், வெள்ளி

கோப்பாய் சித்திர வேலாயுத சுவாமி கோவிலில்மகா சிவராத்திரி விழா கோவை ஞான பண்டித சைவ விருத்திச்சங்க ஆதரவில் நடைபெறும் இவ்விழாவில் உபந்நியாசம், இசை நிகழ்ச்சிகள் சங்கீத கதாப்பிரசங்கப் ஆகியன இடம் பெறும்.

**கொழும்புத்துறையில்**


யாழ்ப்பாணம், வெள்ளி

கொழும்புத்துறை மன்றுடும் விநாயகமூர்த்தி பிள்ளையார் கோவிலில் இவ்வருடம் மகா சிவராத்திரி கொண்டாடப்பட விருக்கிறது அன்றையதினம் சங்கீதக்கச்சேரியும், 'சிவவிரதங்களும் அவற்றின் மகிமையும்' என்னும் பொருள் பற்றி பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியத்தின் கதாப்பிரசங்கமும் நடைபெறும் ஜயந்தி நகர் மகாதேவா ஆச்சிரமத்தைச் சேர்ந்த வடிவேல் சுவாமியின் கதாப்பிரசங்கமும் நிகழும். (ந. நி)

**ஊரெழுவில்**

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி

மகாசிவராத்திரி விழா இவ் வருடமும் ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை விசேட பூசைகளுடன் நடைபெறவிருக்கிறது, இரவு நான்கு ஜாம பூசைகளும் அதனைத் தொடர்ந்து கூட்டுப் பிரார்த்தனைகள் சொற்பொழிவுகளும் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.



## விவசாயத்தில் டிராக்டர்கள்

நாடு விவசாயத்தில் தீவிர அபிவிருத்தியடைய வகுக்கப்பட்டுள்ள [illegible] திட்டத்தில் டேவிட்பிறவுண் டிராக்டர்கள் உதவியளித்து வருகின்றன. இந்த டிராக்டர்கள் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள ஏக விநியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளரேலண்ட்ஸ் (டிராக்டர்கள்) லிமிட்டெட் ஸ்தாபனத்தார் இந்த

மிட்ட நவீன இயந்திர மயமான விவசாயத்துறைக்கு உதவ ரேலண்ட்ஸ் (டிராக்டர்கள்) லிமிட்டெட் ஸ்தாபனத்தார் இப்போதுதான் மற்றொரு பகுதி டேவிட் பிறவுண்ட் டிராக்டர்களையும் இணைப்புப் பெட்டிகளையு[illegible] (ட்றெய்லர்கள்) இலங்[illegible]க எஞ்ஜினியர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாருக்கும் சுமிடோமோ சோஜி கெய்ஷா லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் உள்ளூர் பிர[illegible]திகளுக்கும் வருவித்துக்

## அரசியல் வாதிகளுக்கு
## கூட்டுறவுஇயக்கத்தில் அக்கறையில்லையாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

'வடபகுதி கூட்டுறவு அச்சகத்திற்கு வருமானவரியிலிருந்து விதிவிலக்களிக்கப் படவேண்டும்.'

இவ்வாறு வடபகுதிகூட்டுறவு அச்சகத்தலைவர் திரு. எஸ்.கே. திரவியநாயகம், வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற ரேயல் விசாரணை ச்சபையிடம் தெரிவித்தார். மூன்றாவது நாளாக விசாரணை செய்து கொண்டிவக்கும் இச்சபையிடம் யாழ்ப்பாண வைத்தியசாலை நாணய சிக்கனச் சங்கத்தலைவர் திரு. எஸ். ஆர். அருமைநாயகம் சாட்சியமளிக்கையில், 'கூட்டுறவு இயக்கம் தொழிற்சங்கவாதிகளின் பாதிப்பிலிருந்துபாது காக்கப்பட வேண்டுமென்றும், கூட்டுறவு திணைக்களத்தில் தனியான கணக்குப்பரிசோதகர் பகுதியிருத்தல் வேண்டுமென்றும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலே கூட்டுறவு இயக்கத்தில் அரசியல் வாதிகளின் தலையீடு இருக்கின்றதா என ரேயல்விசாரணைக்குழுத்தலைவர் டாக்டர் லெயிட்லோ வினவியபோது, அரசியல்வாதிகள் கூட்டுறவு இயக்கத்தில் போதிய அக்கறை செலுத்துவதில்லையென விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

இடைக்காடு மத்திய ஐக்கிய நாணய சங்கப் பிரதிநிதி சாட்சியமளிக்கையில், ஐக்கியநாணய சங்கங்கள் ஸ்திரப்படுத்தவேண்டுமென்றும், அதனால் நாட்டுக்கு அதிக நன்மையேற்படுமென் ஐக்கிய பண்டசாலைகளிலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் கள்ள வியாபாரிகளின் செல்வாக்கு இருக்கிறதென்றும் தெரிவித்தார்.

வட பகுதியில் விவசாயச் சங்கங்களை விவசாயிகளா நடத்துகின்றனரெனரேயல் விசாரணைக் குழுவைச் சேர்ந்த திரு. டி. மெல், வினவியபோது விவசாயிகளல்லாதவர்கள்தான் விவசாயச் சங்கங்களை விவசாயியின் சம்மதத்துடன் நடாத்துகின்றனரெனத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டுறவுப் பணியாளர் சங்கத்தின் பிரதிநிதி சாட்சியமளிக்கையில் உள்ளூராட்சி மன்றங்களிலே கடமையாற்றும் ஊழியருக்கும் சேவைக்குழு போன்று கூட்டுறவு ஊழியருக்கும் சேவைக்குழு ஒன்று இருக்க வேண்டுமென்று தெரிவித்தார். இலங்கை ஆய்வாளர் கழகமும் சாட்சியமளித்தது. (ந. நி.)

## "நடுநிலைமை தவறாத 'ஈழநாடு' பத்திரிகை"
### மட்டுநகர் எம். பி. வாழ்த்து

மட்டக்களப்பு, வியா.

ஈழநாடு பத்திரிகையின் 10-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை பின்கண்ட வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைத்துள்ளார்:-

"ஈழநாடு ஈரைந்து வருடங்கள் வளர்ந்து இளவல் பருவத்துள் நுழைவதை அறிந்து மகிழ்கிறேன். நாள் இதழ் பத்திரிகை வரலாற்றில் பத்து ஆண்டுகள் ஈழநாடு நடைபெற்று வருவது பெரும் சாதனையே. ஆரம்பத்தில் வார இதழாக ஈழநாடு வெளிவந்திருப்பினும் அந் நாட்களையும் கஷ்டங்கள் நிரம்பிய காலமென்றே நான் நினைக்கிறேன். நாட்டின் தலைநகருக்கு வெளியில் நாள் இதழ் வெளியிடுவது நகைப்பிற்கிடமான தென்று நம்மவர் கூறி வந்தபோதும், முயற்சி கொண்ட திரு. கே. ஸி. தங்கராசா அவர்களுக்கு தமிழ் கூறும் நல்லுலகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றது.

பத்திரிகை வெளியிடுவதை சிலர் ஒரு தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். ஆனால் திரு. தங்கராசா அவர்கள் ஒரு லட்சியப் பயணமாக அதனை மேற்கொண்டுள்ளார். அவருக்கு நீடித்த ஆயுளும் நிறைந்த செ[illegible]ம் கிடைக்க வேண்டும்.

'ஈழநாடு' பத்திரிகை உலகில் தனி நடைபோடுகிறது. நடுநிலை தவறாத நோக்கு, நல்ல சமுதாயம் உருவாக வேண்டு[illegible]மன் கராசா அவர்கள் பல்லாண்டு வாழ்க! தமிழ் பேசும் மக்கள் பேராதரவு நல்குவார்களாக."

## குருநகர்

(1-ம் பக்கத தொடர்ச்சி)

டுள்ளது.

கமிஷனர்சிபார்சில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இவ்விடங்களில் தமது வள்ளங்களை நங்கூரம் பாய்ச்ச விரும்புவோருக்கு உத்தரவுச்சீட்டு கள் வழங்கப்படவேண்டும். வடகரையில் ஒரு முருகைக்கற்பார் இருப்பதால் கடல் அரிப்பு ஒரு பெரும் பிரச்னையாக இருக்காது. இயந்திர வள்ளச் சொந்தக்காரர் தமது வள்ளங்களைக் கொண்டு செலுத்த வசதியாய் வான்கள் வெட்ட அனுமதித்தல் வேண்டும். இப்படியான தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுக்கும்போது மீனவர் அதிகமாகவுள்ளஇடங்களைத் தவிர்த்து போக்குவரத்துக்கு வசதியுள்ள இடங்களையே விரும்பவேண்டும்.

தகுந்த இடங்கள் பிறமக்களிடமிருந்தால் அவற்றை அரசாங்கம் எடுத்து ஆழ்கடல் மீன் பிடியாளருக்கு விலைக்கோ அன்றி குத்தகைக்கோ கொடுக்கவேண்டும்.

புகையிரதப் பாதை முடிவிற்குக் கிட்டவும் பல வசதிகளுடனும் கூடிய மயிலிட்டியில் அல்லது மயிலிட்டிக் கண்மையில் மீன்பிடித் துறைமுகம் ஒன்று இருந்

## சுவீப்முடிவுகள்

((1-ம் பக்கத் தொடர்ச்சி)

05 Z 0298 04 V 0211

## ஐயாறன் எழுதுகிறது

தமிழ்நாடு புதிய முதலமைச்சர் கருணாநிதி பதவி ஏற்றதும், ராஜாஜி, பெரியார். காமராஜர் இவர்களை நேரில் கண்டு அவர்களது ஆசியைப் பெற்றுள்ளார். காமராஜர் காங்கிரஸ் அவருக்குக் கூடிய ஆதரவு அளிக்கும் என்று உறுதிகூறியது பெரிதும் வரவேற்கத்தக்கது.

தமிழ்நாட்டிலே தி. மு. க. வும் காங்கிரஸும் நல்லபடி ஒத்துழைப்பின், பொதுமக்களுக்கு இதனால் பல நன்மைகள் ஏற்படுவதுடன், அரசியல் வாழ்வும் புனிதமடைந்து, மற்ற ராஜ்யங்களுக்கும், தலைமை அரசாங்கத்துக்கும் மேலான முன்மாதிரியாகவுமிருக்கும்.

0 0

அமரர் அண்ணாவும் பதவியேற்றதும் இப்படிச் செய்தார். அவர் காட்டிய இம் மேலான வழியை கருணாநிதி அவர்களும் பின்பற்றியிருக்கின்றார்.

எந்தக்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பினும்அவர்களெல்லாம் மக்களால் தங்களதுநன்மைக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்கள். ஒரு கட்சியினர் மற்றொரு கட்சியை அரசியல் விரோதிகளாகக் கருதி வெறுப்பையும் துவேஷத்தையும் வளர்க்கும் வழக்கத்தைப் பல இடங்களில் பார்க்கிறோம். இவ்வித மனப்பான்மை பொதுமக்களுக்கு அதிக தீங்கு செய்வதுடன் ஜனநாயகத்தையே தோற்கடிக்கும்.

இலங்கையில்கூட பிரதமர் டட்லி பதவி ஏற்றதும், திருமதி பண்டாரநாயக்கா, என். எம். பெரேரா முதலியவர்களைக்கண்டு அவர்களது ஒத்துழைப்பையும் நல்லாசியையும் கோரியிருப்பின் எவ்வளவு நன்றாக இருக்கும்! இப்போதும்கூட அவ்விதம் சந்தித்துப் பேசுவதில் தவறுண்டா?

0 0 0

கருணாநிதிஅவர்கள் தமது மந்திரி சபைக்கு நான்கு பேரை புதிதாக நியமித்திருக்கிறார். அண்ணாவின் மந்திரிசபையில் மொத்தம் ஒன்பதுபேரே இருந்திருக்கையில் இப்போது இருவர் அதிகமாக அதாவது 11 பேர் உள்ளனர். இலங்கையைவிடபலமடங்கு பெரிதான தமிழ்நாடு ராஜ்யத்தின் ஆட்சியை நடத்த 11 மந்திரிகளை அதிகமென்று கூறமுடியாது. புதிய அமைச்சர்கள் முதல்வர் கருணாநிதி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நல்ல வெற்றி

யாழ்ப்பாணத்திலே பனம் சாராயம் வடிக்கும் தொழிற் சாலையை அமைக்கும் யோசனையை, அரசாங்கம் கைவிட்டு விட்டது நன்றியுடன் பாராட் டத் தக்கதாகும். வீண்பிடி வாதம் காட்டாமல் இங்குள்ள பொது மக்களின் கருத்தை மதித்து தன் திட்டத்தை மாற்றிக்கொண்டதால், பிரதமர் இப்பகுதி மக்களின் புதிய நம்பிக்கையையும் அபிமானத்தையும் பெறுவார்.

சில மாதங்களுக்கு முன் இந்தக் கூடாத யோசனை முதல் முதலாக வெளிவந்த போது இதை பலமாக எதிர்த்தோம். திருவள்ளுவர், மகாத்மாகாந்தி, புத்தர்பெருமான் முதலியோர் எதிர்த்த மதுபானத்தை, இங்கு பெருக்குவது பொதுமக்களுக்கு நல்ல தல்லவென்று சுட்டிக்காட்டினோம். பின்னர் இந்துசமய ஸ்தாபனங்களின் சார்பாக ஒரு தூதுக்கோஷ்டியினர் பிரதம மந்திரியையும், உள்துறை அமைச்சரையும் கண்டு இதை ஆட்சேபிக்கவே அரசாங்கம் செவி சாய்த்து உடன் அந்தத் திட்டத்தை மாற்றி விட்டது பெரிய காரியம்.

இந்து சமயஸ்தாபனங்கள் எடுத்த இந்த நன்முயற்சி வெற்றிபெற்றது அவர்களுக்குப் புதிய ஊக்கமளிப்பதுடன், இப்பகுதி மக்களின் குறைகளை நீக்க வேறு பல காரியங்களை, இவ்விதமே சாதித்துக் கொள்ளவும் தூண்டுதலாக இருக்கு மென்றே நம்புகிறோம்.

இந்த டிராக்டர்கள் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள ஏக விநியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டுள்ள ரேலண்ட்ஸ் (டிராக்டர்கள்) லிமிட்டெட் ஸ்தாபனத்தார் இந்த துறையில் ஏற்கனவே வெகு தூரம் முன்னேறியுள்ளார்கள். நாட்டில் பெயர்பெற்ற ஸ்தாபனமாக விளங்கி வரும் இந்த ஸ்தாபனத்தார் டிராக்டர் சொந்தக் காரர்களுக்கு மிகவும் வசதிகளைச் செய்து கொடுத்துள்ளனர். இத்துறையில் அவர்கள் சிறப்புமிக்க சேவைசெய்து வருகிறார்கள்.

விவசாயப் பகுதிகளில் டேவிட் பிறவுண் டிராக்டர்கள் மிகவும் திறமையான சேவை செய்து வருகின்றன. இப்பகுதிகளில் இவற்றின் சேவையைப் பார்ப்பது ஒரு அழகான காட்சி திட்ட

நு..க என்ஜினியர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாருக்கும் சுமிடோமோ சோஜி கெய்ஷா லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் உள்ளூர்ப் பிரஇ...நிகளுக்கும் வருவித்துக் ...டுத்துள்ளார்கள்.

ரேலண்ட்ஸ் (டிராக்டர்கள்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் விற்பனை டைரக்டர் திரு. ஆப்றேடியூட் றெமிடமிருந்து இலங்கை என்ஜினியர்கள் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் டைரக்டர் திரு. எறிக்சூசா முதல் பகுதி டிராக்டர்களுக்கான திறப்புக்களைப் பெறுவதை இங்கு காண்கின்றோம். இலங்கை என்ஜினியர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் ஏற்றுமதி இறக்குமதிப் பகுதி பொறுப்பதிகாரி திரு. அலெஸ் லேடி சில்வாவும் இப்படத்தில் நிற்கிறார்.

கிடைக்க வேண்டும். 'ஈழநாடு' பத்திரிகை உலகில் தனி நடைபோடுகிறது. நடுநிலை தவறாத நோக்கு, நல்ல சமு...யம் உருவாக வேண்டு...மன்னும் துடிப்பு பளிச்சிடுவதைக் காண்கிறேன்.

தங்கள் பணிவளர்க! தங்

புகையிரதப் பாதை முடிவிற்குக் கிட்டவும் பல வசதிகளுடனும் கூடிய மயிலிட்டியில் அல்லது மயிலிட்டிக் கண்மையில் மீன்பிடித் துறைமுகம் ஒன்று இருந்தால் மிகவும் நன்மை பயக்கும்.

(ந. நி.)

# யாழ்ப்பாணம், மன்னார், வவனியாவில் பாலங்கள் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம், மன்னார், வவனியா ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஒவ்வொரு பாலம் அமைக்கப் படவிருக்கின்றது. இவ்வுத்தரவு அண்மையில், உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாசாவால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இப்பாலங்கள் உள்ளூராட்சிமன்றங்களைச் சேர்ந்த வீதிகளில் அமைக்கப்படும். பால வேலைகளின் நிர்மான வேலைகளுக்கு வடமாநில பொறியியலாளர் திரு. சி. புவனேஸ்வரன் நேரடிப்பார்வையின்கீழ் இயங்கும்.

இந்தப் பாலங்களின் மேல் தளத்தட்டுக்கள் இரண்டே, இரண்டு மணித்தியாலத்தில் அமைத்து முடிக்கப்படும். இவ்விதம் மேல் தளங்கள் முன்பே தயாரிக்கப்பட்ட 'அங்கங்களை' உபயோகித்து கட்டப்படும்.

இவ்விதம் இரண்டு மணித்தியாலத்தில் மேல்தளம் அமைக்கும்பாலம் இங்கேயே முதல்தடவையாகப்போடப் படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ந. நி.)

## ''ஆலயங்களதான் மறுமலர்ச்சிக்கு காரணம்''

அளவெட்டி, வியாழன்

''சைவ ஆலயங்கள்தான் சைவசமய மறுமலர்ச்சிக்கு காரணமாக உள்ளன. ஆதலால் தான் இன்று ஈழத்திலுள்ள பழமையான ஆலயங்களை புனரமைப்பு செய்ய சைவ மக்கள் முன்வந்து சைவத்தை காக்க முற்படுகிறார்கள். இந்நேரத்தில் தெல்லிப்பளையில் உள்ள மக்களும் தெல்லிப்பளை காசிப்பிள்ளையார் ஆலயத்தை புனரமைப்பு செய்து சைவத்தை காக்க முன்வர வேண்டும்.''

இவ்வாறு மகாஜனக் கல்லூரி அதிபர் தெ. து. ஜெயரத்தினம் தெல்லிப்பளை பாலர் ஞானோதயா சபையின் 23-வது ஆண்டு விழாவில் கலந்து உரையாற்றுகையில் கூறினார்.

ஆசிரியர் செ. கதிரேசர் பிள்ளை பேசுகையில்: சைவம் பரந்த நோக்குடையதென்றும், எந்த ஒரு தெய்வத்தை வழிபட்டாலும் அந்த வழிபாட்டை பரமசிவன் ஏற்று அருள் செய்வாரென்றும், சமயகுரவர்ள் நமக்கு நல்ல நெறிகளைக ாட்டியுள்ளார்கள் என்றும்க

## கதாப்பிரசங்கம்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று மாலை 5-45 க்கு பிரதோஷ உற்சவமும் மாலை 6 மணி முதல் இரவு 7 மணிவரை பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவால் சம்பூர்ண மகாபாரதப் பிரசங்கத் தொடரில் 'பொற்றாமரை பெற்ற பொற்கொடி'' என்னும் பொருள் பற்றிய கதாப்பிரசங்கம் நடைபெறும்.

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், வெள்ளி

'சொக்கன்', 'சேந்தன்' ஆகிய இருவரும் சேர்ந்து எழுதிய இசை நாடக நூலான 'நாவலர் நாவலரான கதை' நாளை சனிக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு யாழ். சைவபரிபாலன சபையாரின் நாவலர் ஆசிரம மண்டபத்தில் வெளியிடப்படவிருக்கிறது. பரமேஸ்வரக் கல்லூரி அதிபர் திரு. மு. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் பண்டிதமணி வித்துவான் சுப்பையபிள்ளையும், நாவலர் மகா வித்தியாலய அதிபர் திரு. தா. வேலுப்பிள்ளையும் ஆசியுரை நிகழ்த்துவர். திருவாளர்கள் க. சிவராமலிங்கம், க. தி. சம்பந்தன், பண்டிதர் ச. இராமச்சந்திரன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர். செல்வி நிரஞ்சனாதேவி இராமநாதன் முதற் பிரதியைப் பெறுவார். சங்கீத பூஷணம் சோ. கோவிந்தராசா நூலின் சில பாடல்களை விழாவில் பாடுவார்.

## தொழிலதிபருடன் பேசுவார்

வல்வெட்டித்துறை, வியா.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு இம்மாதம் 17ம் திகதி அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தொழிற்சங்க சம்மேளனத் தலைவரும் யாழ்ப்பாண எம். பி. யுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் விஜயம் செய்யவிருக்கிறார். காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை உற்பத்தித் தொழிலாளர் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கி வரும் திரு. பொன்னம்பலம் தொழிலாளர்களின் பொதுப் பிரச்னைகள்பற்றியும், நிர்வாகத்தினருக்கும் தொழிலாளருக்குமிடையே நிலவும் பிரச்னைபற்றியும் தொழில் அதிபருடன் கலந்தாலோசிப்பாரெனத் தெரிகிறது.

## யாழ். இந்து பழைய மாணவர் முயற்சி

அச்சுவேலி, வியாழன்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினர் விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்றை நிறுவுவதற்கு முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆய்வுகூடம் அமைவதற்கு இரண்டடுக்கு கட்டிடம் ஒன்று நிறுவப்படவிருக்கிறது.

இதற்கான பணத்தைக் கல்லூரி பழையமாணவர் சங்கத்திடமிருந்தும் பிரமுகர்களிடமிருந்தும் அறவிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

பூநகரி ஐக்கிய நாணய சங்க மேற்பார்வைச்சபை கருத்தரங்கமும். வருடாந்தப் பொதுக்கூட்டமும் இம்மாதம் 20-ம் திகதி கிராம சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

கிராமசபைத் தலைவர் திரு. வை. வல்லிபுரம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் திரு, ரி. கந்தசாமி, திரு. சு. கந்தையா ஆகியோர் உரையாற்றுவார்கள். (ந. நி.)

## கோப்பாய் நோயாளர் படும் அவதி

புத்தூர், வெள்ளி

கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரிக்கென ஒரு 'அம்புலன்ஸ் இல்லாமலிருப்பதால் ஆபத்தான நோயாளிகளை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு உடனடியாக அனுப்புவதில் பெரும் சிரமம் ஏற்படுகிறது. அத்துடன் அம்புலன்ஸ் வண்டியை அனுப்புமாறு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியுடன் அவசரமாக டெலிபோனில் தொடர்பு கொள்ளவும் முடியாதிருக்கின்றனராம். அவசரமாக டெபோன் இணைப்புகேட்கும் வேளையில் எல்லாம் பலமணி நேர தாமதம் இருப்பதாக யாழ்ப்பாணம் தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் தெரிவிக்கிறதாம்

கோப்பாய் ஆஸ்பத்திரி நோயாளிகளின் நலனை முன்னிட்டாவது ஒரு அம்புலன்சையோ அல்லது பெரியாஸ்பத்திரியுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளக்கூடிய டெலிபோன் வசதியையோ செய்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கோப்பாய் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார். நேரடி டெலிபோன் இணைப்பு தருவதால் ஓரளவு நிலைமையைச் சமாளித்துக் கொள்ள முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாளை சத்திய பிரமாணம்

சென்னை, பெப், 14

தமிழக அமைச்சரவையில் புதிய அமைச்சர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள நால்வரும், நாளைகாலை 11-30 மணிக்கு தமிழக கவர்னர் சாத்தார் உஜ்ஜல்சிங் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொள்வார்கள்

## இரவல்கொடுக்க மறுத்தவருகு நேர்ந்தகதி

யாழ்ப்பாணம், வெள்ளி

சைக்கிளை இரவல் கொடுக்க, மறுத்த ஒருவர் கையாலும் காலாலும் தாக்கப்பட்டாராம்.

தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்ட நல்லூர் அரசடியைச் சேர்ந்த பொன்னுத்துரை என்பவர் இப்போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரைத் தாக்கியதாகக் கூறப்படும் கந்தசாமி என்பவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர். (கா. நி)

## மரண அறிவித்தல்

### திரு. சி. சிவபாதசுந்தரம்

பூநகரி அத்தாய் திரு. மு. சின்னத்தம்பி திருமதி செல்லம்மா சின்னத்தம்பி ஆகியோரின் அருமை மகனும் திருமதி தையல்நாயகியின் அருமைக் கணவரும் துஷ்யந்தி, கம்சானந்தி, உமாசங்கர், நிஷானந்தி ஆகியோரின் அருமைத் தந்தையும், சிவசுப்பிரமணியத்தின் அருமைத் தமையனுமாகிய மடுல்கலை போஸ்ட்மாஸ்டர் திரு. சிவபாதசுந்தரம் அவர்கள் காலமாகி விட்டார். அன்னாரது பூதவுடல் இன்று மாலை 4 மணிக்கு பூநகரியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து மயானத்துக்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

675

## சுவீப்முடிவுகள்

((1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 05 Z 0298 | 04 V 0211 |
| 15 G 0021 | 04 A 0464 |
| 04 T 0498 | 22 H 0646 |
| 27 V 0125 | 24 P 0336 |
| 11 B 0507 | 11 R 0060 |
| 10 C 0251 | 16 U 0659 |
| 26 O 0475 | 20 G 0007 |
| 23 K 0131 | 38 V 0125 |
| 46 S 0951 | 06 K 0579 |
| 43 G 0970 | 36 F 0258 |
| 20 P 0288 | 23 S 0318 |
| 25 Y 0249 | 16 C 0428 |
| 41 F 0064 | 22 X 0780 |
| 23 J 0463 | 14 L 0858 |
| 02 J 0827 | 15 L 0145 |
| 02 U 0957 | 26 H 0989 |
| 31 S 0686 | 22 M 0748 |
| 34 U 0772 | 17 H 0574 |
| 24 P 0680 | 40 R 0371 |
| 01 V 0573 | 26 E 0859 |
| 46 J 0531 | 15 B 0646 |
| 32 B 0797 | 43 F 0769 |
| 25 P 0112 | 27 R 0734 |
| 23 P 0918 | 25 E 0990 |
| 17 R 0075 | 12 X 0001 |
| 02 X 0209 | 28 Y 0758 |
| 20 V 0447 | 40 S 0808 |
| 35 H 0088 | 14 K 0495 |
| 37 A 0781 | 37 Y 0243 |
| 40 M 0966 | 42 Q 0397 |
| 18 K 0645 | 16 A 0133 |
| 23 A 0160 | 39 B 0413 |
| 23 V 0981 | 32 C 0569 |
| 13 T 0669 | 42 U 0471 |
| 37 W 0952 | 22 O 0502 |
| 34 G 0041 | 37 J 0445 |
| 39 V 0303 | 01 M 0033 |
| 13 V 0727 | 20 W 0985 |
| 11 Y 0987 | 42 U 0263 |
| 29 H 0164 | 22 H 0664 |
| 37 Q 0659 | 21 X 0742 |
| 14 K 0876 | 15 R 0153 |
| 25 G 0242 | 23 M 0708 |
| 43 Y 0953 | 14 G 0100 |
| 30 U 0772 | 11 F 0720 |
| 44 X 0459 | 12 C 0119 |
| 01 O 0736 | 02 H 0249 |
| 44 M 0558 | 10 F 0506 |
| 13 G 0420 | 10 X 0337 |
| 37 G 0399 | 24 T 0441 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.)

## தவறணையில் கசிப்பு

கொழும்பு, வியாழன்

கொழும்பில் 3 சாராய தவறணைகளை திடீர்சோதனையிட்ட பொலிஸார் தவறணையில் வைக்கப்பட்டிருந்த கசிப்புபோத்தல்களைக கைப்பற்றினர்.

கலால் இலாகாவினரின் விலாசம் பொறிக்கப்பட்ட லேபல்களுடன் மூடப்பட்டிருந்த சாராயப் போத்தல்களில் கசிப்பு அடைக்கப்பட்டிருந்ததாம். சாராயத்தவறணையில் வைத்து கசிப்பையும் கலந்து விற்றதாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட தவறணை சொந்தக்காரர் நாளை நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவர்.

கையைவிட பலமடங்கு பெரிதான தமிழ்நாடு ராஜ்யத்தின் ஆட்சியை நடந்த 11 மந்திரிகளை அதிகமென்று கூறமுடியாது. புதிய அமைச்சர்கள் முதல்வர் கருணாநிதியின் பளுவைக் குறைக்கவும், ஆட்சி நிர்வாகவும் மேலாக நடக்கவும் உதவ வேண்டும்.

0 0 0

ஏற்கெனவே சட்டசபைத் தலைவராக இருந்த ஆதித்தனார், இப்போது மந்திரியாகி இருக்கிறார். கட்சிஅரசியலில் தலையிட்ட காரணத்துக்காகவே அவர்கள் சபைத்தலைவர் பதவியை விட்டு விலக நேரிட்டது. இப்போது அமைச்சர் என்ற நிலையில் அவர் அரசியலில் பூரணமாக ஈடுபடமுடியும்,

முதல்வரும், ஆதித்தனாரும் தினசரிப் பத்திரிகை நடத்துபவர்கள், கருணாநிதியைஆசிரியராகக்கொண்டது 'முரசொலி'. பின்னவர் 'தந்தியை' ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்துபவர். பத்திரிகைக்காரர்கள் தமிழக ஆட்சியை நடத்துவது, பத்திரிகைக்காரர்களுக்கு பெருமகிழ்ச்சியும் அளிக்கவேண்டும்.

இந்த ஆட்சி பொதுமக்களுககுக் கூடிய நன்மைகள் செய்து வெற்றிபெற, சென்னை பத்திரிகைக்காரர்களெல்லாரும் கூடிய ஒத்துழைப்பு அழிப்பரென்றே எதிர்பார்க்கலாம்.

0 0 0

இந்த அமைச்சரவையில் ம. பொ. சி. க்கும் இடம் அளித்திருந்தால், பல விதங்களிலும் நன்மையாகஇருந்திருக்கும். ஆனால் மந்திரி பதவிகளுக்கு கட்சியிலேயே அதிகம்பேர் போட்டியிடுகையில். தி. மு. க. கட்சியைச் சேராதவர்களுக்கு எங்கே இடம்கிடைக்கமுடியும்?

மழுவான் வலன் ஏந்தி மறையோதி மங்கைபங்கா,
தொழுவா ரவர் துயராயின தீர்த்தல்லுனதொழிலே,
செழுவார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்,
அழகா உனக்காளாய் இனி அல்லேன் எனலாமே.

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 14-ம்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org